கண் வைத்திய நிபுணர்கள் சிபார்சு செய்யும் கண்ணாடிகளை சரியாக அமைத்துக் கொடுப்பவர்கள்
எஸ். எம். பெர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி, (இலங்கை வங்கிக்கு அருகில்) யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு
Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 5-00

OPTICIANS
SIGHT TESTED
PRESCRIPTIONS ACCURATELY DISPENSED
S. M. FERNANDO
580, HOSPITAL ROAD
(Near Bank of Ceylon)
JAFFNA.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 புரட்டாதி 30 ஞாயிற்றுக்கிழமை (16 — 10 — 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 326

# விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் எனக்கூறி பொதுமக்களை விடுவிப்பது கேலிக் கூத்து!

## நேற்று விடுதலையான 18 பேர் விவரம்

வடமராட்சி, ஒக். 16

பலாலி முகாமில் இருந்து விடுவிக்கப்பட்ட 18 பேரின் பெயர் விவரங்கள் வருமாறு:-

★ சிறில் டொனால்ட் (வயது 26)
★ சந்தியாப்பிள்ளை சவுந்திரநாதன் றொபேட் (வயது-27- குருநகர்)
★ செல்வத்தம்பி தோமஸ் ஜெனிஸியஸ் (வயது 21— குருநகர்)
★ றேமன் டக்ளஸ் சத்தியசீலன் (வயது 30 — முழங்காவில்)
★ ஆரோக்கியநாதன் இன்பன் (வயது 22 — வேம்படி வீதி, யாழ்ப்பாணம்)
★ வெற்றிவேலாயுதம் செல்வேந்திரன் (வயது 25 — நாகர் கோவில் மேற்கு)
★ இராமலிங்கம் சாந்தகுமார் (வயது 27 —இன்பருட்டி)
★ கணபதிப்பிள்ளை கனகரத்தினம் (வயது 46 —

(6-ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்கத்தின் செயலுக்கு "ராவய" ஆசிரியர் கண்டனம்

கொழும்பு, ஒக்டோபர். 16

நல்லெண்ணத்தின் அடிப்படையில், விடுதலைப் புலிகள் உறுப்பினர்களை விடுவிப்பதாகக் கூறிக்கொண்டு, அரசாங்கம் சாதாரண தமிழ் பொதுமக்களை விடுதலை செய்துள்ளது. இது மிகவும் கேலிக்குரிய செயலாகும்.

அரசின் இந்த நடவடிக்கையை விடுதலைப் புலிகள் கேலிக் கூத்தாகவே எடுத்துக் கொள்வர்.

இவ்வாறு கண்டனம் தெரிவித்தார் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் நெருக்கமான உறவுகளைக் கொண்டவரும், ''ராவய'' சிங்கள வார இதழின் ஆசிரியருமான விக்டர் ஐவன்.

பி. பி. ஸி. சிங்களச் சேவைக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே விக்டர் ஐவன் அரசாங்கத்தை விமர்சித்துள்ளார்.

திரு. விக்டர் ஐவன் தமது பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது:-

நல்லெண்ணத்தை வெளிப்படுத்தும்வகையில் அரசினால் விடுவிக்கப்பட்ட 18 பேரும் விடுதலைப் புலிகளுடன் எந்தவித அரசியல் தொடர்பு மற்ற சாதாரண பொதுமக்களாவர்.

இந்தப் 18 பேரினதும் பெயர் பட்டியலை அரசு சமர்ப்பித்திருப்பது விடுதலைப்புலிகளின் நகைப்புக்கு இடமளித்துள்ளது. அவர்கள் இதனை ஒரு கேலிக்கூத்தாகவே கருதுவர்.

கடந்த காலத்தில் தமது காவலில் இருந்த முக்கிய பேர் வழிகளையே நல்லெண்ண அடிப்படையில் விடுதலைப் புலிகள் விடுவித்திருந்தனர். ஆனால் அதற்குப் பதிலாக நல்லெண்ணத்தைப் பிரதிபலிக்கும் வகையில் அரசு விடுதலை செய்திருப்பது சாதாரண மீனவர்களையும், இரண்டொரு ஏனைய

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வியாங்கொடையில் 22 மனித எலும்புக்கூடுகள்

கொழும்பு, ஒக். 16

வியாங்கொடைப் பகுதியில் பாடசாலை வளவு ஒன்றில் இருப்பதாகச் சந்தேகிக்கப்பட்ட மனித புதைகுழி ஒன்று தோண்டப்பட்டபோது அதில் இருந்து 22 மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த எலும்புக்கூடுகள் அத்தனகல நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

## நாடு திரும்புகிறார் தொண்டமான்

### இ. தொ. கா முடிவு விரைவில்

கொழும்பு, ஒக். 16

இந்தியாவுக்குச் சென்றிருந்த இ. தொ. கா. தலைவர் எஸ். தொண்டமான் நேற்றிரவு கொழும்பு திரும்ப இருந்தார் என பி. பி. ஸி சிங்கள சேவையில் நேற்றிரவு அறிவிக்கப்பட்டது.

நாடு திரும்பவுள்ள தொண்டமானை வரவேற்பதற்காக தகவல் ஒலிபரப்புத்துறை பிரதி அமைச்சர் அலவி மௌலானா விமான நிலையத்துக்கு நேற்றிரவு செல்ல இருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதித் தேர்தலில் இ. தொ. கா யாரை ஆதரிக்கும் என்பது பற்றிய முடிவை தற்போதுள்ள நிலையில் தொண்டமான் நாடு திரும்பியதும் வெளியிடுவார் எனத் தாம் நம்புவதாகவும் –

பொதுவாக சந்திரசேகரனும், தொண்டமானும் எமக்கு ஆதரவளிப்பதே பொருத்தமானது எனத் தாம் கருதுவதாகவும் பிரதி அமைச்சர் அலவி மௌ

(6 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலையானோரில் 16 பேர் நேற்று பருத்தித்துறை வந்து சேர்ந்தனர்

### இருவர் நேராக காரைநகர் புறப்பாடு

பலாலி முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பொது மக்களில் 18 பேர் அங்கிருந்து விடுவிக்கப் பட்டுள்ளனர்.

இவர்களில் ஐந்து பேர் நேற்று முன்தினம் பலாலியில் வைத்து யாழ் வந்து திரும்பிய அரச பிரதிநிதிகள் முன்னிலையில் விடுவிக்கப்பட்டனர்.

விடுவிக்கப்பட்டவர்களில் காரைநகரைச் சேர்ந்த சின்னத்தம்பி திருஞானசம்பந்தன் (வயது 35), கனகசபை நடராசா (வயது 34) ஆகிய இருவரும் கடற்படையினர் மூலமாக காரைநகருக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

விடுதலையான ஏனைய 16 பேரும் காங்கேசன்துறையில் இருந்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினரால் 'கோமாரி' கப்பலில் பருத்தித்துறைக்கு கூட்டி வரப்பட்டனர்.

இவர்களில் பலரும் வடமராட்சி, மண்டைதீவு, அராலி கடற்பகுதியில் தொழிலில் ஈடுபட்டிருந்த வேளை கைதான மீனவர்கள் ஆவர்.

இந்தியாவில் இருந்து திரும்பும் வழியிலும், கிளாலி கடலில் பயணம் செய்த வேளையிலும் படையினரிடம் பிடிபட்ட சிலரும் இவர்களில் அடங்குவர்.

(இ-ஐ-173-1)

## பலாலி ராணுவ முகாமில் நடைபெற்ற சந்திப்பு

வடமராட்சி, ஒக். 16

யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்திய அரச தரப்புப் பிரதிநிதிகள் பலாலி முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களை சந்தித்து அவர்களுடன் உரையாடினர்.

யாழ்ப்பாணத்தில் பேச்சுவார்த்தைகளை முடித்துக் கொண்டு நேற்று முன்தினம் கொழும்பு திரும்புகையில் பலாலி முகாமில் தரித்து நின்ற சமயம், இச்சந்திப்பு நிகழ்ந்தது.

இச்சந்திப்பை அடுத்து கைதிகளில் முதலில் ஐவரும் பின்னர் 13 பேரும் விடுதலை செய்யப்பட்டனர். (இ-173)

## பலாலியில் இன்னும் 11பேர்

வடமராட்சி, ஒக். 16

பலாலி முகாமில் இன்னும் பதினொருபேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் கற்கோவளம் வல்வெட்டித்துறை, மட்டக்களப்பு பகுதிகளைச் சேர்ந்தவர்கள்.

நேற்று பலாலியில் இருந்து விடுவிக்கப்பட்டு பருத்தித்துறைவந்தவர்கள் இதனைத் தெரிவித்தனர். (இ-173)

### முச்சந்தி முரளி



முழுப் பூசணிக்காயை சோற்றுக்குள் புதைக்கினம் பாருங்கோ...!

## பலாலி முகாமில் இருந்த சமயம் எம்மீது தாக்குதல், சித்திரவதை

### விடுதலையான காரைநகர் வாசி தகவல்

வடமராட்சி, ஒக். 16

பலாலி முகாமில் 24 பேர் ஒரே அறையில் வைக்கப்பட்டிருந்தோம். அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த சமயம் படையினர் எஸ்லோன் குழாய்கள், இரும்புக் கம்பிகள் ஆகியவற்றால் எம்மைத் தாக்கினர்.

நேற்று விடுதலை செய்யப்பட்டவர்களில் ஒருவரான காரைநகர் நீலிப்பந்தனையைச் சேர்ந்த ஐயம்பிள்ளை சோதிநாதன் (வயது 44) உதயன் செய்தியாளரிடம் மேற்கண்டவாறு கூறினார்.

பருத்தித்துறை இறங்குதுறையில் வைத்து அவர் தெரிவித்ததாவது:-

1993 ஆம் ஆண்டு காரைநகரில் இராணுவ சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

அவ்வேளையில் அங்கு ஊரடங்குச்சட்டம் போட்டு படையினர் வீடு வீடாகத் தேடுதல் நடத்தினர். [illegible]

எமது வீட்டையும் சோதனையிட்டு விட்டு படையினர் சென்றனர்.

தொடர்ச்சியாக வாரக்கணக்கில் அங்கு ஊரடங்குச் சட்டம் போடப்பட்டதால் எமக்கு உணவுக்கு பெரும் கஷ்டம் ஏற்பட்டது.

### வீட்டு வளவில் மகளின் சடலத்தை புதைத்தோம்

இந்நேரத்தில் [illegible] எனது மூத்த மகளுக்கு வயிற்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### தமிழ் இன்பக் கண்காட்சி ஆரம்பநாள் நிகழ்வில் பேச்சு:

# அடுத்த சந்ததி ஆயுதங்கள் ஏந்தும் நிலைமைஏற்படக்கூடாது

## இதுவே எமது! விருப்பம் என்கிறார் புதுவை

யாழ்ப்பாணம். ஒக். 16

''நாங்கள் யுத்தப் பிரியர்கள் அல்லர்; யுத்தம் தொடர வேண்டும் என்று விரும்புவோரும் அல்லர். இந்த யுத்தம் எங்களுடன் முடியவேண்டும். எமது எதிர்கால சந்ததியினர் ஆயுதம் ஏந்த வேண்டிய நிலைமை ஏற்படக்கூடாது என்பதே எமது விருப்பம் ஆகும்.''

தமிழீழ கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை இவ்வாறு கூறினார்.

யாழ். இந்துக் கல்லூரியில் நேற்று 15 ஆம் திகதிதொடங்கிய தமிழ் இன்பக் கண்காட்சியின் ஆரம்ப விழாவில் தலைமையுரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

யாழ். உள்ளூராட்சித் திணைக்களம் ஒழுங்கு செய்த கண்காட்சியின் ஆரம்பவிழாவில் வைத்தியக் கலாநிதி எம். கணேசரெட்னம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார். தமிழீழ விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பைச் சேர்ந்த திரு. எழிலன் தேசியக் கொடியை ஏற்றினார்.

திரு. புதுவை இரத்தினதுரை மேலும் பேசுகையில் கூறியதாவது:

நாம் நேற்று எப்படி வாழ்ந்தோம்; இன்று எப்படி வாழ்கின்றோம்; நாளை எப்படி வாழ்வோம் என்பதை இக் கண்காட்சி காட்டுகின்றது.

இக்கண்காட்சி இரண்டு மூன்று நாட்கள் முன்னதாக ஆரம்பித்திருக்கவேண்டும். பேச்சுவார்த்தைகளுக்காக கொழும்பிலிருந்து வந்த அரச தரப்புப் பிரதிநிதிகள் கண்காட்சியைப் பார்த்திருக்க வேண்டும்.

நாங்கள் எப்படி வாழ்ந்தோம்; நீங்கள் எப்படி அழித்தீர்கள்; நாங்கள் எப்படி அழி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அரிஸ்ரைட் ஹெய்ட்டி திரும்பினார்.

போர்ட்-ஒப்பிறின்ஸ், ஒக். 16

ஹெய்ட்டியின் முன்னாள் ஜனாதிபதி அரிஸ்ரைட் மூன்று வருடகாலத்துக்குப் பின்னர் நேற்று அமெரிக்காவில் இருந்து விமானம் மூலம் ஹெய்ட்டி சென்றடைந்த போது அவருக்கு மாபெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

தலைநகர் போர்ட் — ஒப்பிறின்ஸில் ஆயிரக்கணக்கான மக்கள் வீதிகளில் நடனமாடி அவரை வரவேற்றனர்.

அரிஸ்ரைட்டுடன் அமெரிக்க ராஜாங்க அமைச்சர் வாரன் கிறிஸ்தோபரும் விமானத்தில் ஹெய்ட்டி சென்றிருந்தார். (இ)

## கிழக்கில் புலிகள் ஊடுருவல் படையினர் உஷார் நிலை

கொழும்பு, ஒக். 16

நூற்றுக்கதிகமான விடுதலைப் புலிப் போராளிகள் கிழக்கு மாகாணத்தினுள் ஊடுருவியுள்ளதாக இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் அறிவித்ததை அடுத்து அப்பகுதியில் இராணுவத்தினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டிருக்கின்றனர்.

பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி த ஐலண்ட் மேற்கண்டவாறு செய்தி வெளியிட்டுள்ளது.

## மட்டக்களப்பில் 10 தமிழர் கைது

மட்டக்களப்பு, ஒக். 16

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் குடும்பஸ்தர் உட்பட 10 தமிழர்களை கைதுசெய்து முகாம் கொண்டு சென்றுள்ளனர்.

கடந்த 12 ஆம் திகதி திகிலிவெட்டைப் பகுதியில் இச் சம்பவம் இடம்பெற்றது.

சின்னமணி காத்தமுத்து (65 வயது), பிள்ளையான் செல்வம் (21 வயது), காந்தப்போடி [illegible] (வயது 25), [illegible]

# இடைத் தரகர்கள் எவரும் எமக்குத் தேவை இல்லை

## குவேக்கர் சமாதானக் குழுவிடம் லக்ஷ்மன் கதிர்காமர்

கொழும்பு, ஒக். 16

இடைத் தரகர்கள் எவரும் தலையிடாத நிலையில் அரசு சமாதான முயற்சிகளை முன்னெடுக்கிறது என வெளிவிவகார அமைச்சர் திரு. லக்ஷ்மன் கதிர்காமர் 'குவேக்கர்' சமாதானக் குழுவினரிடம் தெரிவித்துள்ளார்.

'குவேக்கர்' சமாதானம் மற்றும் சேவை ஸ்தாபனங்களை சேர்ந்த தூதுக்குழு அதன் லண்டன் கிளையின் உதவிப் பொதுச் செயலாளர் திரு. றொபர்ட் நீதார்ட் தலைமையில் வெளிவிவகார அமைச்சரை அவரது அமைச்சில் அண்மையில் சந்தித்தது.

திரு. என். ராமமூர்த்தி, மற்றும் வதிவிடப் பிரதிநிதி திருமதி பென்னி றொபின்ஸ் ஆகியோரும் 'குவேக்கர்' குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

இந்த சந்திப்பு தொடர்பாக வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே முன்கண்ட தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

சமாதான நடவடிக்கைகளில் தம்மால் இயன்றளவு உதவ விருப்பம் தெரிவித்தது 'குவேக்கர்' சமாதானக்குழு.

இதற்கு நன்றி தெரிவித்த வெளிவிவகார அமைச்சர் திரு. லக்ஷ்மன் கதிர்காமர், இடைத்தரகர்கள் எவரும் தலையிடாத நிலையில் அரசு சமாதான முயற்சிகளை முன்னெடுக்கிறது என்று தெரிவித்தார் என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கானை வெள்ளில்

ஸ்ரீ சிவசுப்பிரமணிய தேவஸ்தான

**வழிபடுவோர் சபை**

எமது சபையால் நடத்தப்பட்டு வரும் அறநெறிப் பாடசாலைக்கான நிரந்தர கட்டடம் அமைப்பதற்கான அறக்கொடை நிதியம் தொடர்பான அங்குரார்ப்பணம் 09 - 10 - 1994 அன்று அறநெறி பாடசாலையின் தற்காலிக அமைவிடத்தில் சபைத் தலைவர் தலைமையில் நடைபெற்றது.

கம்பன் கழகத் தலைவர்

**திரு. இ. ஜெயராஜ்**

அவர்களின் சிறப்புச் சொற்பொழிவுடன் ஆரம்பமான அங்குரார்ப்பண நிகழ்ச்சியை தொடர்ந்து

சங்கானைப் பிரதேச செயலர் / மேலதிக அரச அதிபர்

அவர்கள் முதல் மூன்று அறக்கொடை நிதியத்தைப் பெற்று மங்களகரமாக ஆரம்பித்து வைத்தார்.

அறக்கொடை நிதியம் (மலர்) வழங்கப்பட்டமையைத் தொடர்ந்து சபைத் தலைவர் அவர்களால் அறக்கொடை பாடசாலை கட்டட நிர்மாணம் தொடர்பான சிறப்பு அறிக்கை வாசிக்கப்பட்டது.

நவராத்திரி தினத்தையொட்டி விசேட பூசையும் பிரதிக் கல்விப் பணிப்பாளர் (சங்கீதம்)

**திரு. S. கணபதிப்பிள்ளை**

அவர்களின் பண்ணிசையுடன் எமது பாடசாலை சிறார்களின் பண்இசை பாடல்களுடனும் அன்றைய நிகழ்வு சிறப்புற நிறைவேறியது என்பதை அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

வெள்ளில் ஸ்ரீ சிவசுப்பிரமணிய தேவஸ்தான வழிபடுவோர் சபை சார்பில்,

தலைவர்.

குறிப்பு:

அறநெறிப் பாடசாலை பதிவிலக்கம் யா/7/56/14/28 எமது சபையின் நேரடிப் பரிபாலனத்திற்கு உட்பட்டது. இதில் ஆலய நிர்வாகத்திற்கு தலையீடு செய்ய எதுவித உரிமையும் இல்லை. சபையின் நடைமுறைகளைத் தெரிந்து கொள்ள விரும்பும் எவரும் சபைச் செயலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

விளம்பர அன்பளிப்புக்கு எங்கள் நன்றி

[33363]



உரும்பிராய்

ஞான வைரவ சுவாமி கோயில்

**பொதுச் சபைக் கூட்டம்**

காலம்: 20-11-1994 ஞாயிற்றுக்கிழமை பி. ப. 3-00மணி

இடம்: மேற்படி ஆலய மண்டபம்

முக்கிய விடயங்கள்:

நிர்வாக,நிதி அறிக்கைகள் சமர்ப்பித்தல், அமைப்பு விதிகள் திருத்தம்.

முன்னர் அறிவிக்கப்பட்ட பிரகாரம் (16-10-94) இன்று நடைபெறவிருந்த கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் மேற்படி திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகிறோம்.

இங்ஙனம்

-மேற்படி தர்மகர்த்தா சபை.

கோப்பாய் வீதி,
உரும்பிராய்.
16-10-94

(33369)



**விதைநெல்**

இரகங்கள்:

**BG**: 300 — வெள்ளை அரிசி ரகம்
**BG**: 350 — சிவப்பு அரிசி ரகம்
**BW**: 351 — சிவப்பு அரிசி ரகம்

பேராதனை விவசாயப் பண்ணையில் இருந்து கொண்டுவரப்பட்ட நல்லின விதை நெல் தேவையானவர்கள் தங்கள் பகுதி ப.நோ.கூ. சங்கங்கள் மூலமோ அல்லது இ.111, பிரதான வீதியிலுள்ள யாழ்.மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசக் காரியாலயத்தில் கமக்காரர் அடையாள அட்டையில் பதிந்து பெற்றுக் கொள்ளலாம்.

முன்னுரிமைப்படி விநியோகம் நடைபெறும். தேவையான ப. நோ. கூ. சங்கங்கள் எம்முடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம். வீட்டுத் தோட்டத்திற்கான உரப்பைக்கற்றுகள், உவர் நிலத்தில் பயிர்செய்வதற்குரிய அடிக்கட்டு பசளை ''ஜிப்சேற்றும்'' விற்பனைக்கு இருக்கின்றது.

-தலைவர்.

(சி/9511)


# ஈழத்தமிழரின் அவலநிலை முடிவுக்கு வருமா?

# புதுத்தென்புடன் திரும்பிச் செல்லும் சந்திரிகாவின் சமாதானத் தூதுக்குழு!

ஓகஸ்ட் 16– பொதுத் தேர்தல் முடிவுகள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

''இனப்பிரச்சினைக்கு எப்படியும் தீர்வு காணுவேன்''— என்று அமரர் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவின் சமாதியில் அவரது மகள் சந்திரிகா சபதம் எடுக்கிறார்.

நாட்டில் இனப்பிரச்சினை பூதாகாரமாக உருவெடுக்கக் காரணமாக இருந்தவர் அமரர் பண்டாரநாயக்கா.

தேர்தல் முடிவுகள் எந்தக் கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மையை வழங்காத நிலையில்—

சிறுபான்மை தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகளின் ஆதரவுடன் 'சிறுபான்மை, அரசு ஒன்றை அமைத்த பிரதமர் சந்திரிகாவினால் தமிழர் பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காண முடியுமா? யுத்த மூலம் தீர்வு காண்பாரா? என்ற கேள்வி தமிழ் மக்கள் மத்தியில் எழுந்தது.

**சந்திரிகாவின் அறிவிப்பு**

இந்த நிலையில்தான் சமாதான முறையில் தீர்வு காணப்போகின்றேன் என்ற தனது பிரகடனத்தை வெளியிட்ட பிரதமர்— வடபகுதி மீதான பொருளாதாரத் தடையைத் தளர்த்தினார். ''தமிழ் மக்களின் பிரதிநிதிகள் விடுதலைப்புலிகள் தான். நான் அவர்களுடன் நிபந்தனையின்றி பேசப் போகின்றேன்''— என்றும் அவர் அறிவித்தார்.

தலைவர் வே. பிரபாகரனும் சந்திரிகாவின் நேசக் கரத்துக்கு பதில் கூறும் வகையில் ''நாமும் பேச்சுவார்த்தைக்கு தயார்'' என அறிவித்தார்.

சமாதானத் தீர்வு காண எடுக்கப்படும் முயற்சிகள் இரு கட்டங்களாக நடக்கவேண்டும் என்றும்—

முதலில் மக்களின் அன்றாடப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்றும்— தேசியத் தலைவர் அறிவித்தார்.

தேசியத் தலைவரின்கோரிக்கையை ஏற்பதாக அரசு வெளிநாடுகளுக்கு காட்டும் வகையில் பிரசாரம் செய்த போதும் தமிழ் மக்களின்அன்றாடப் பிரச்சினையை தீர்க்க உருப்படியான நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை.

வடமராட்சி, திருகோணமலை, மட்டக்களப்பு, குருநகர், அச்சுவேலிப்பகுதிகளில் படையினரின் இன அழிப்பு நடவடிக்கைகள் வழமை போல் தொடர்ந்தன.

தடை நீக்கப்பட்ட பொருள்கள் வடக்கு வருவதை படையினர் தொடர்ந்தும் தடுத்து வந்தனர்.

புதிய அரசுப் பதவி ஏற்கும் முன்னர் வடக்கிலும், கிழக்கிலும், என்ன நிலை இருந்ததோ அது தொடர்ந்தது.

**அரச தூதுக்குழு யாழ். வருகை**

இந்த நிலையில்தான் விடுதலைப்புலிகளுடன் பேச்சுகள் நடத்த அரசுத்தூதுக்குழுவின் உறுப்பினர்கள் கடந்த வியாழன் (13- 10- 1994) யாழ் வந்தனர்.

இரத்மலானை விமான நிலையத்தில் உயர்நிலை அரச அதிகாரிகளால் வழியனுப்பி வைக்கப்பட்ட அரச தூதுக்குழுவினரை பலாலி விமானத்தளத்தில் வடபிராந்திய இராணுவத் தளபதி அசோகா ஜெயவர்த்தனாவும் மற்றும் படை அதிகாரிகளும் வரவேற்றனர்,பின்னர் அரசகுழுவினரை ஹெலிக்கொப்டர் மூலம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிக்கு வழியனுப்பி வைத்தனர்.

மக்களை கொன்று குவித்த ''ஹெலி'' அமைதியாக ''சமாதானத்தை'' தேடும் உள்ளங்களுடன் யாழ். பல்கலைக் கழகத்துக்கு முன்பாக வந்து இறங்கியதும் மக்கள் சமாதானத் தூதுவர்களை வரவேற்றனர்.

**யாழ் மண்ணில் லயனல்**

சரியாக காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழகத்தில் தரை இறங்கிய ''ஹெலி'' யில் இருந்து முதலில் இறங்கியவர் லயனல் பெர்னாண்டோ. இந்தமண்ணில் சிலகாலம் வாழ்ந்து மக்களோடு ஒட்டி உறவாடியவர். மீண்டும் மண்ணில் காலடி எடுத்து வைத்த நிறைவோடு



லயனல் கைஅசைத்து, புன்சிரிப்பை உதிர்த்தார்.

இவர்களை விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன்பாலசிங்கம், தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் திரு. சு.ப.தமிழ்ச்செல்வன், செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழு யாழ். வதிவிடப்பிரதிநிதி செல்வி. மேரி போர்கின்ஸ் ஆகியோர் கைகுலுக்கி வரவேற்றனர்.

**விடுதலைப்புலிகள் பாதுகாப்பு**

நவீன ஆயுதங்களுடன் விடுதலைப்புலிகளின் விசேட கொமாண்டோ அணி நிறைந்த ஜீப் வண்டியில் முன்னே செல்ல அடுத்து ''பஜேரோ'' ஜீப்பில் சமாதான குழுப் பிரதிநிதிகள் சென்றனர். அதைத் தொடர்ந்து வாகனங்கள் அணியாக செல்ல அவர்கள் சுபாஷ் விருந்தினர் விடுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

வீதியில் இருமருங்கிலும் கூடி இருந்த மக்களுக்கு அரச பிரதிநிதிகள் கை அசைத்து தமது மகிழ்ச்சியை வெளியிட்டனர்.

சுபாஷ் விடுதியை அடைந்த அரச பிரதிநிதிகள் அங்கு 10 நிமிடங்கள் ஓய்வு எடுத்த பின் சரியாக 9-30 மணிக்கு சுண்டுக்குளியில் உள்ள தமிழீழ அரசியல் துறை நடுவப் பணியகத்தை சென்றடைந்தனர். அங்கு அரச பிரதிநிதிகளை விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் தலைவர் திரு. கே. கரிகாலன் கை குலுக்கி வரவேற்றார். அவர்களை விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் நாலவரும் அங்கு உள்ள விசேட மாநாட்டு மண்டபத்துக்கு அழைத்துச் சென்றனர்.

**முதல் கட்டப் பேச்சு ஆரம்பம்**

தேசியத் தலைவரின் படத்துக்கு முன்பாக, மாநாட்டு மேசையின் இரு மருங்கிலும் இருதரப்பு பிரதிநிதிகளும் நேருக்கு நேர் அமர்ந்திருந்தனர்.

9–40 க்கு ஆரம்பமான முதலாவது அமர்வின் ஆரம்பத்தில், பிரதமர் சந்திரிகா பேச்சுவார்த்தை நடைமுறை குறித்து எழுதிய கடிதத்தை அரசு குழுத் தலைவர் பாலபட்ட பெண்டி வாசித்தார். அதன் பின்னர் பேச்சுவார்த்தை நடக்கும் நேர அட்டவணை தீர்மானிக்கப் பட்டது.

மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை மையமாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட ஆறு சுற்று கலந்துரையாடல்கள் குறித்தும் ஆராயப்பட்டது.

இரு நாட்களிலும் 4 அமர்வுகளின் மூலம் ஆறு சுற்று கலந்துரையாடல்களையும் மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது. முதல் நாள் காலை அமர்வு 9-40 முதல் 12-30 மணி வரை இடம் பெற்றது. பிற்பகல் 2-30 மணி முதல் 5-15 மணி வரையான 2 ஆவது அமர்வு இடம் பெற்றது. எல்லாமாக மூன்று சுற்று கலந்துரையாடல்கள் இடம் பெற்றன.

**முக்கிய பிரச்சினைகள் ஆராய்வு**

மக்களின் போக்குவரத்து பிரச்சினை — வட பகுதியின் பொருளாதாரக் கட்டுமானத்தை சீரமைப்பது, உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் விலைகளைக் குறைத்தல் — மின்சாரம், நீர்ப்பாசனம், வீதிப் புனரமைப்பு, பாடசாலை, மருத்துவ மனைகள் புனரமைப்பு — ஆகிய விடயங்கள் குறித்து ஆராயப்பட்டது. பேச்சுகள் சுமுகமாக, நட்பு அடிப்படையில் இடம்பெற்றதாக இருதரப்பினரும் தெரிவித்தனர்.

**கோட்டை விஜயம்**

முதல் நாள் பேச்சுக்களை முடித்துக் கொண்ட அரச குழுப் பிரதிநிதிகள் கடந்த கால இராணுவ நடவடிக்கையால் சிதைந்து எச்சமாகக் காட்சி தரும் யாழ். கோட்டைப் பகுதிக்குச் சென்றனர்.

யாழ். நூலகம், வீரசிங்கம் மண்டபம், தபால் நிலையம், தொலைத்தொடர்பு நிலையம், சுப்பிரமணியம் பூங்கா ஆகியவற்றைப் பார்த்து — ''இது தானா அழகாபுரியான யாழ்ப்பாணத்தின் இன்றைய தோற்றம்'' என்று லயனல் பெர்னாண்டோ ஆச்சரியப்பட்டார்.

''நான் களைப்பாற, காற்று வாங்கிய இடமா இது? நான் அரசாங்க அதிபராக இருந்த காலத்தில் இந்தப் பகுதியில் கண்ட ரம்மியமான காட்சிகளை இனிக்காண முடியுமா...'' என்று கேட்டார் அவர்.

**2 ஆம் நாள் பேச்சுகள்**

நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்குச் சென்று வழிபட்ட பின்னரே லயனல் பெர்னாண்டோ 2 ஆவது நாள் பேச்சில் கலந்து கொண்டார்.

காலை 8–30 மணிக்கு ஆரம்பமான பேச்சுக்களின் போது யுத்த நிறுத்தம், கடல் வலய தடைச்சட்டம் நீக்கம், யாழ். பொதுநூலக எரிப்பு சம்பவம் ஆகியன பற்றி விரிவாகப் பரிசிலிக்கப்பட்டன.

யுத்த நிறுத்தம் தொடர்பாக இரு தரப்பினரும் இடையில் நீண்டநேரம் விவாதிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து இருதரப்பும் இணைந்து கூட்டறிக்கையை தயார் செய்ததுடன் நண்பகல் 1–15 க்கு பேச்சுகள் முடிவடைந்தன.

பேச்சுக்களின் பலாபலன்களை தெரிவிக்கும் வகையில் செய்தியாளர் மாநாடு பிற்பகல் 2–15 க்கு ஆரம்பமானது. இம் மாநாட்டில் வெளிநாட்டு, உள்நாட்டு மற்றும் உள்ளூர் பத்திரிகைகளின் செய்தியாளர்கள் கலந்து கொண்டனர்.

**கூட்டறிக்கை**

செய்தியாளர்கள் சரமாரிய கேள்விகளைக் கேட்டு இரு தரப்பு பிரதிநிதிகளைத் திணறடித்தனர். பேச்சு தொடர்பான கூட்டறிக்கை ஒன்றை இரு தரப்பினரும் இணைந்து வெளியிட்டனர்.

எப்படியாவது தீர்வு காண வேண்டும் என்ற சந்திரிகாவின் நிலைப்பாட்டை விளக்கினார் அரசுக் குழுவின் தலைவர் பாலபட்டபெண்டி.

**மாற்றம் ஏற்படுமா? ஏமாற்றம் தொடருமா?**

மீண்டும் பழைய யாழ்ப்பாணத்தை காணவேண்டும் என்ற தனது மனத் துடிப்பை வெளியிட்டார் முன்னாள் அரச அதிபரும், இந்நாள்

**- மாவை குகன் -**

தகவல்துறை அமைச்சு செயலாளருமான லயனல் பெர்னாண்டோ.

10 வருட காலத்துக்கு முன்பிருந்த யாழ்ப்பாணம் மீண்டும் விரைவில் உருவாகும் என்ற நம்பிக்கையை வெளியிட்டார் குழுவில் அங்கம் வகிக்கும் யாழ்ப்பாணத் தமிழரான திரு. ராஜன் ஆசிர்வாதம்.

''நான் சின்ன வயதில் கண்ட யாழ்ப்பாணத்தை மீண்டும் புனரமைத்து நவீன நகராக்கப் பாடுபடுவேன்'' என்ற தமது கனவை வெளியிட்டார். குழுவின் இன்னொரு உறுப்பினரும், கட்டடக் கலைஞருமான திரு. என். எல். குணரத்தின.

இவ்வாறு தெரிவித்த அரச பிரதிநிதிகளிடம் யாழ்ப்பாணம் வந்ததால் ஏற்பட்ட புதிய தென்பை அவர்களது பேச்சிலும் முகத்திலும் அவதானிக்க முடிந்தது.

எனினும்—

கடந்த 40 வருட கசப்பான ஏமாற்றங்கள் இன்னும் தொடருமா?

சிங்கள மக்களிடம் பெற்ற ஆணையை சந்திரிகா நிறைவேற்றுவாரா? அதற்கான துணிவும், திறனும் அவரிடம் உண்டா?

இதுதான் இன்று யாழ். மக்களிடம் எழும் கேள்விகள். ★


பார்த்தவர்கள் பாராட்டுகிறார்கள்

குடும்பத்துடன் பார்த்து மகிழ

★ நெல்லியடி மகாத்மா,
★ சாவகச்சேரி தெய்வேந்திரா

ஆகிய திரையரங்குகளில்

அகன்ற வெண்திரையில்

நிதர்சனமும்,
கலை, பண்பாட்டுக்கழகமும்
இணைந்து உருவாக்கிய

திரு. பொ. தாசனின்

"இன்னும் ஒரு நாடு"

தினசரி 6-30 மணி
சனி, ஞாயிறு 10-30, 2-30, 6-30மணி

[சி–9339]



பெண்களுக்கு முக்கிய அறிவிப்பு

யாழ்ப்பாணத்தில பெண்களுக்கு மட்டும் உரிய இடம் ஒன்று

அது தான் **மகளிர் தையலாளர்** (LADIES TAILORS)

79 1/1 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

★ பிளவுஸ் ★ பாடசாலை யூனி போம் ★ ஸ்கேட் ★ ஜீன்ஸ் ★ பஞ்சாபி

போன்ற சகல விதமான உடுப்புக்களும் தைக்குமிடம். பெண்களுக்குரிய அழகுசாதனப் பொருள்கள் அத்தனையும் நிறைந்த ஒரே இடம்

அது தான் **மகளிர் கோட்டம்** (LADIES CORNER)

81, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

★ எங்களை ஆதரித்து நல்லாதரவு தருபவர்களுக்கு எங்களின் தீபாவளி வாழ்த்துக்கள் ★

[சி–9516]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமயப் பெரியார் சி. சண்முகவடிவேல் அவர்களுக்கு

ஏழாலை முத்தமிழ் மன்றத்தினர் எடுக்கும்

# ★ பட்டமளிப்புப் பாராட்டுவிழா சிறப்பிதழ் ★

16 - 10 - 1994

## ஆதீன முதல்வரின் ஆசி

சைவ அருட்பெருந்தகையீர்!

சைவப் பெரியார் திரு. சண்முகவடிவேல் அவர்களுக்கு ஏழாலை முத்தமிழ் மன்றம் பாராட்டு விழா எடுக்க விருப்ப தறிந்து பெருமகிழ்ச்சி. சைவமும் நற்றமிழும் வளர உழைக்கும் சான்றோர்களை அவர்களின் வாழ்நாளிலேயே கௌரவித்து மகிழ்விப்பது தான் யுக்திபூர்வமானதும் செய்ய வேண்டிய நன்றிக்கடனுமாகும். அவ்வமயம் நாமும் இதனை நேரில் கண்டு மனநிறை வெய்துகிறோம். இப் பெரியார் எந்நேரமும் சைவ சின்னங்கள் தரித்து மேல் அணி இல்லாமல் ஒரு சைவப் பழமாகவே தோற்றமளிப்பார். இதனை எல்லோரும்கடைப்பிடிப்பதரிது. முறையாக பிரமச்சாரியம் அநுஷ்டிக்கும் துறவி எனில் மிகையாகாது கணக்காளராக சித்தி எய்தியும் அத்துறையில் ஈடுபடாதுவிடுத்தவர். சைவ சமயச் சொற்பொழிவுகள் ஆற்றும் திறனும் புராண பயன் உரை விரிக்கும் பௌராணிகருமாக மதிப்புப் பெற்றவர்.

அன்னார் நலமே நீடுவாழ்ந்து, சைவத் தொண்டுகள் புரிய வேண்டுமென எல்லாம் வல்ல பரம் பொருளின் திருவருளை உளமார வேண்டி அவரை மனப்பூர்வமாக ஆசீர்வதிக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஸ்ரீலஸ்ரீசோமசுந்தரபரமாச்சாரிய சுவாமிகள்**
குருமஹா சந்நிதானம்

## ஏழாலையின் அருட் செல்வர்

ஏழாலைக்கிராமம் பல அறிஞர்களை, ஆத்மஞானிகளை மெய்யடியார்களைத் தோற்றுவித்த புண்ணியபூமி. அவ்வரிசையிலே வந்த சைவப் பெரியார் சண்முகவடிவேற் சுவாமிகள், சமது மெய்யடியார் தோற்றத்தால், தம்மைக் காண்போரை, சிவனடியைச் சிந்திக்க வைப்பார். தமது வாக்கினாலும் சிந்தனையினாலும் சிவத்தியானத்திற்கு இட்டுச் செல்வார். பரம்பொருளோடு தொடர்பு கொள்வதற்கு செய்யும் முயற்சியே ஆத்மயோகம். அதற்காக தினந்தோறும் நன்நூல் ஆராய்தல். ஆலய வழிபாடு செய்தல், தலதீர்த்த யாத்திரை செய்தல் என்பவற்றைக்கடைப் பிடிக்கும் புண்ணிய சீலர்.

ஆலயங்களில் இறைவன் உள்ளதால் அதைப்படமாடும் கோயில் என்றும், சரீரத்தின் கண் இறைவனை உறைவதால் அதனை நடமாடுங் கோயில் என்றும் நம் பெரியோர் சொல்லினர். ஒவ்வொருவரும் சரீரத்தை நடமாடும் கோயிலாக நினைந்து வழிபடல் வேண்டும். .. இறைவன் இவ்வுடம்பைத் தந்தது தம்மை வழிபடவே" என்ற மெய்நெறியில் வாழும் சிவனடியாரை பாராட்டிப் பட்டமளிக்கும் முத்தமிழ் மன்றத்தினருடன் நாமும் வாழ்த்துகின்றோம்.

பல்லாண்டு பல்லாண்டு வாழ்க வாழ்க என வாழ்த்துவதில் பெருமை கொள்கிறோம்

**அதிபர், மாணவர், ஆசிரியைகள்**
ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலை,
சுன்னாகம்.

## உண்மைச் சிவனடியார்

"இந்தப்பிறவி எமக்குக் கிடைத்தது இறைவனை வழிபட்டு முத்தியடைவதற்காம்" என்ற நல்வாக்கு நாவலர் பெருமான் அருளியதாகும். இவ்வுயர்ந்த குறிக்கோளுடனே தன்னையும் காத்து சைவத்தையும் பேணி சமூகத்தில் சைவப் பயிரை வளர்த்து வருபவர் பண்டிதர் சண்முகவடிவேல் அவர்கள். சிவத்திரு என்ற அடைமொழியை இப்பெருமகனுக்கு அளித்துப் போற்றுவதில் நம்மவர் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றனர். நடையிலே துறவு, உறவிலே துறவு, வாக்கிலே துறவு என்பவற்றை மேற்கொண்டு உண்மைச் சிவனடியாராய் இன்று எம்மத்தியில் விளங்குபவர். இவர் வேடமும் போலி வாழ்வும் இவருக்கு மருந்துக்கும் தெரியாது இவர் துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் கடந்த இருபது ஆண்டுகளாக புராணபடனம், திருமுறை முற்றோதல் ஆகிய நிகழ்ச்சிகளில் வருடந்தோறும் பங்குகொண்டு ஆலயத்தின் புனித வளர்ச்சிக்கு ஆதரவாக இருப்பவர் இப்பெரியார். இவருக்கு விழா எடுத்துப் பாராட்டுவதில் நாம் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறோம். இவர் மேற்கொள்ளும் சிவப்பணி மேன் மேலும் ஓங்கவேண்டும் என்று துர்க்காதேவியைப் பிரார்த்திக்கிறேன்.

**செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி**
தலைவர்
துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை

## திருநெறியத் தமிழ் செம்மல்

சைவமும், தமிழும் செழித்தோங்கும் பதி ஏழாலை: தமிழறிஞர் திரு. சி. வை. தாமோதரம்பிள்ளை, சைவப் பெரியார் அருளானந்தசிவம் தொட்டு இன்றும் சைவமும் தமிழும் வளர்த்து வரும் சித்தாந்த வித்தகர் திரு. மு. ஞானப்பிரகாசம், பண்டிதர் திரு. மு. கந்தையா வரை சைவத்தமிழறிஞர்களை ஈந்தது ஏழாலையே. இத்தகையோரால் பேணப்பட்டு வந்த சைவத் தமிழ் பாரம்பரியத்தில் சைவமும், தமிழும் வளர்க்கப் பலர் முகிழ்த்தெழுந்ததில் வியப்பேதும் இல்லை. இவ்வகையில் உருவான திரு. சி. சண்முகவடிவேல், தன் அளப்பரிய சைவத் தமிழ் பணிகட்காகப் பாராட்டப்படுவதும், "திருநெறியத்தமிழ் செம்மல்" பட்டம் பெறுவதும் களிப்பூட்டும் விடயமாகும். உயிருடன் உள்ள போதே கௌரவிக்கும் ஏழாலை முத்தமிழ் மன்றத்தின் பண்பும் பாராட்டுக்குரியதே! இவ்விழா சிறப்புற நிறைவேற எல்லாம் வல்ல சிவகாமசுந்தரி சமேத நடராஜப்பெருமானை வழுத்தி அமைகின்றேன்.

**திருமதி பத்மறஞ்சினி உமாசங்கர்,**
நாட்டிய கலைமணி, பீ. ஏ. (ஆனர்ஸ்)

## அர்ப்பண வாழ்வுடையவர்

அன்பர் சி. சண்முகவடிவேல் தமது இளமைக் காலத்தில் லௌகீக கல்வி யுத்தியோ உயர்வுகளைப் பெறுதற்கு உபகாரமாகச் சார்பு வகையால் தமக்கிருந்த வாய்ப்புக்களைப் பொருள் செய்யாது சுயவிவேகத்தினால் தம்மை அறநூற் கல்வி கேள்விகளுக்கும் திருமுறைப் பாராயணத்திற்கும் சிவபுராணபடனத்திற்கும் அர்ப்பணித்த இவருடைய சுத்தப் பிரமசரியப் பாங்கான அர்ப்பண வாழ்வு போற்றத் தகும்.

தன்னூட்டமான உணர்வொருக்கத்துடன் சிவாலய சந்நிதிகளில் இவர் தனிமையுந் தானுமாயிருந்து பலவருடங்களாக நிகழ்த்தி வரும் திருமுறைப் பாராயணங்கள் சம்பந்தப்பட்ட ஆலயங்கள் பிரத்தியேகமான தெய்வீகங்களை ததும்பச் செய்து வருதல் கண்கூடு.

இவர் மகிமையை உணர்ந்து பாராட்டும் வகையாற் சமூகம் இவர் முன்மாதிரியைப் பின்பற்றிச் சிறத்தற்கேதுவாக இவர்க்கு நிகழும் பாராட்டு விழா, பலவகைச் சிறப்புகளும் மலிந்து தெய்வீக விழாவாகப் பொலிய வாழ்த்துகிறோம்.

— மு. கந்தையா (B. A)

# சீரிய நெறிகளைக் கடைப்பிடித்த சிறந்த சைவநெறித் தொண்டன்

**பல** ஆலயங்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது ஏழாலை. சி. வை. தாமோதரம்பிள்ளை, சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர், தமிழ்ப்பணி ஆற்றிய இடமும் அதுவே. கற்றறிந்த பெருமக்களையும், சமயப் பணி ஆற்றும் தொண்டர்



சமயப் பெரியார் சி. சண்முகவடிவேல்

களையும், எழுத்தாளர்களையும், கலைஞர்களையும் ஆதரித்து போற்றிய பெருமை ஏழாலைக்குரியது. இன்று பாராட்டப்பெறும் திரு. சி. சண்முகவடிவேல் அவர்களாலும் அவரது சொந்த ஊருக்கு சிறப்பு உண்டாகிறது. கடந்த முப்பது வருடகாலமாக திரு. சண்முகவடிவேல் சமயப்பணியாற்றி வருவது யாவரும் அறிந்ததே. பல வருடங்களாக பயன் கருதாது பணியாற்றிய அன்பருக்கு ஏழாலை முத்தமிழ் மன்றத்தினர் விழா எடுப்பது மிகவும் பொருத்தமானது.

தூயவெண்ணீறு அணிந்த மேனி, தாழ்வடம், காவி வஸ்திரம், நெற்றியிலே சந்தனப்பொட்டு, கையிலே ஒரு சமய நூல் என்பன ஒருங்கே அமைந்த தோற்றம் அன்பர் சண்முகவடிவேல் அவர்களது வடிவம்.

நின்றாலும் இருந்தாலும்
கிடந்தாலும் நடந்தாலும்
மென்றாலும் துயின்றாலும்
விழித்தாலும் இமைத்தாலும்
மன்றாடும் மலர்ப்பாதம்
ஒருகாலும் மறவாமை
குன்றாத உணர்வுடையார்
தொண்டராம்குணமிக்கார்

என்ற பெரியபுராணப் பாடலுக்கு ஏற்ப தனது வழிபாட்டையும் வாழ்க்கையையும் அமைத்துக் கொண்டார். கந்தபுராண கலாசாரம் யாழ்ப்பாணத்தவர்களுடைய அரும்பெரும் சொத்து. புராணபடனம் ஆலயங்கள், மடங்கள், பொது இடங்கள் எங்கும் நாவலர் காலம் தொடக்கம் நன்றாக நடைபெற்று வந்தது. தற்போது அம்மரபு அற்றுப் போய் விடுமோ என்று நாம் அஞ்சிய சமயம் எமக்கு கை கொடுத்து உதவியவர் அன்பர் சண்முகவடிவேல் அவர்களே. கந்தபுராணம் பெரிய புராணம், திருவிளையாடற் புராணம், திருவாதவூரடிகள் புராணம் என்பன ஆலயங்களிலே படிக்கப்படும் பொழுது ஆழமாகவும், நுட்பமாகவும் மரபு தவறாது உரைசொல்வதில் வல்லவர். மேலும் சொற்பொழிவு மூலம் சமய தத்துவத்தையும், சாஸ்த்திர தோத்திர நூல்களின் மகிமையையும் எடுத்துக்கூறி மக்களுக்கு ஒரு முன்மாதிரியாக விளங்குகின்றார். ஆலயங்கள், மடங்கள் கல்லூரிகள், சமய நிறுவனங்கள் ஆகிய இடங்களில் நடைபெறும் சமய நிகழ்ச்சிகளில் பங்குபற்றத் தவறமாட்டார். வாசிப்பு ஒருவரை பூரண மனிதனாக்குகிறது என்ற பேக்கன் என்ற ஆங்கில அறிஞன் கூற்று அன்பருக்கு மிகவும் பொருத்தமாக அமைகிறது. சமய நூல்களை வாசித்து, ஆராய்ந்து சிந்தித்துத் தெளிந்து போதனையிலும் சாதனையிலும் சமய கோட்பாடுகளைக் கடைப்பிடித்த பெருமைக்குரியவர். சமய தத்துவத்துக்கும், கலாசாரப் பண்புக்கும் மாறாக ஏதாவது நடந்துவிட்டால் பண்பாகவும் ஆணித்தரமாகவும் ஒரு புன்முறுவலுடன் அதனை எடுத்துக் கூறத் தவறியதில்லை. தனது உயர் கொள்கைக்கும், இலட்சியத்துக்கும் மாறாக ஏதாவது நிகழ்ச்சிகள் நடைபெறும் சமயங்களில் அவ்விடத்தில் அவரைக் காண்பதரிது.

அன்பாக அதேசமயம் அளவாகப் பேசுவார். அடக்கமாகவும், அமைதியாகவும் சகிப்புத் தன்மையுடன் செயலாற்றும் திறமை அவருக்கு உண்டு. அவருக்குரிய சிறப்புகளில் ஒன்று அபார ஞாபக சக்தி. எனவே பன்னிரு திருமுறைகளில் பல பகுதிகளை அவர் ஓய்வுநேரங்களில் ஓதிக் கொண்டிருப்பதைக் காண முடியும். பற்றற்றான் தாள்களைப் பற்றுவதற்கு ஏற்ற முறையிலே உலகியல் வாழ்வில் ஈடுபாடு அற்றவராக எல்லாவற்றையும் ஈஸ்வர அர்ப்பணமாக செய்யும் பண்புடையவர்.

"கேடும் ஆக்கமும் கெட்ட
திருவினார்
ஓடுஞ் செம்பொனும்
ஒக்கவே நோக்குவர்"

என்ற பெரியபுராணப் பாடல் வரிகள் தொண்டன் சண்முகவடிவேல் அவர்களின் பற்றற்ற வாழ்க்கையைப் படம் பிடித்துக்காட்டுகின்றன. எந்தவிதமான பிரதியுபகாரமும் கருதாது சமயப் பணியாற்றிவரும் இப்பெருந்தகையை நாம் 'தொண்டன்' எனப் பெருமையாக அழைக்கலாம். மயிலணிக் கந்தசுவாமி கோயிலில் அவர் பல காலமாகச் சமயப் பணியாற்றி வந்துள்ளார். தற்பொழுது எமது அன்பான வேண்டுகோளுக்கிணங்க பிரதி வெள்ளிக்கிழமை தோறும் அவர் பெரியபுராணத் தொடர் விரிவுரை செய்து வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

பல சிறப்பான அம்சங்கள் பொருந்திய திரு. சண்முகவடிவேல் அவர்களுக்கு தெரியாத விடயங்கள் சிலவாகும்.

அழுக்காறு, அவா, வெகுளி என்பன அவர் அறியாதது. பொய், வன்சொல், புறங்

(4ஆம் பக்கம் பார்க்க)

**திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம்**

# மனித கூட்டத்துள் வித்தியாசமானவர்

சைவாசாரமும் சிவத்தமிழ் அறிவும் நிறைந்த பலர் வாழும் ஏழாலையில் நற்பணிகளை செய்யவேண்டி அமைந்த ஏழாலை முத்தமிழ் மன்றத்தின் இருபத்தைந்தாவது ஆண்டில் அதன் ஸ்தாபகத்திற்கும், வளர்ச்சிக்கும் காரணமாக இருந்து இப்போது ஆன்மீக வழியில் தனித்துவம் பெற்ற திருவாளர் சண்முகவடிவேல் அவர்களின் முன்னாள் சேவையையும் தற்போதைய சிவப்பணியின் சிறப்பையும் பாராட்டி நன்றியுடன் கௌரவிப்பது அனைவர்க்கும் மகிழ்ச்சியையும் முத்தமிழ் மன்றத்திற்குப் பெருமையையும் தருவதாகும். திருவாளர் சண்முகவடிவேல் அவர்கள் மனிதக் கூட்டத்துள் ஒரு வித்தியாசமானவர். மனத்திடை நின்று மதிவாள் உருவி இனத்திடை நீக்கி இரண்டற வீர்ந்து புனத்திடை அஞ்சுப் போகாமல் மதித்து வாழ நினைந்து வீரமுடன் வென்றவர். அ[illegible] ஒரு [illegible] தேஜசும் நிறை[illegible]றவர். திருமுறையில் பூரண மாகி புராணங்களின் தெளிவு பெற்று விரதானுஸ்டானங்களில் பக்குவப்பட்டு, இருப்பினும் பெருமையில்லாது சிவசின்னமே அணியாக பணிவே பொருளாக வழிபாடே கரமமாக வாழ்ந்து வருபவர். அன்னார் அரும் பணிகள் செய்யும் வலிமை பெறவும் ஸ்ரீ பொன்னம்பலவாணரை துதித்து வாழ்த்துகிறோம்.

"சிவசிவ என்றிட தேவருமாவார்."

சுபம்.

**"சிவாகம கலாநிதி"**
**சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக்குருக்கள்**
ஸ்ரீ கதிரமலைச்சிவன் தேவஸ்தானம்
சுன்னாகம்

## மன்றத்தின் நன்றி

சிவநெறிச் செல்வர் சிவசண்முகவடிவேல் அவர்கள் ஆற்றிய முயற்சியின் வடிவமாக அமைந்தது ஏழாலை முத்தமிழ் மன்றம். 1969இல் இளைஞர்களைக் கூட்டி இம்மன்றத்தை அவர் நிறுவி வளர்த்தார். அதன் முதலாவது தலைவரும் அவரே.

அவருடைய சேவையை மன்றம் பாராட்டி விழா எடுத்து சிறப்பு மலர் வெளியிடுகிறது.

விழாப்பணியில் ஈடுபட்டவர்களுக்கும் வாழ்த்துரை, கட்டுரைகள் தந்தோருக்கும் மன்றம் நன்றியைத் தெரிவிக்கிறது.

நா. இலட்சுமிகாந்தன், [illegible] | ச. மகாதேவன், செயலாளர்.

## பிரதேச செயலர் வாழ்த்து

ஏழாலைக் கிராமம் ஏழு ஆலயங்களைக் கொண்ட சிறப்புடையது. சைவமும், தமிழும் வளர்த்த பல தமிழ் அறிஞர்கள் இங்கு வாழ்ந்திருக்கின்றார்கள். இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். தமிழ்ப் பேரறிஞர் சி. வை. தாமோதரம்பிள்ளை, இலங்கையர்கோன் ஆகியோர் வாழ்ந்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் சைவச் சான்றோர் வரிசையில் சைவப் பெரியார் திரு. மு ஞானப்பிரகாசம், பண்டிதர் மு. கந்தையா, ஆத்மஜோதி நா. முத்தையா ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் இறைபக்தியிலும் சைவப் பணியிலும் தம்மை அர்ப்பணித்தவர்கள். இந்தச் சான்றோர்களைப் பின்பற்றித் தமிழ்ப் பணியிலும் சைவப்பணியிலும் தம்மை ஈடுபடுத்தி வருபவர் சிவ நெறிச் செல்வர் சிவசண்முகவடிவேல் அவர்கள். அன்னாரின் அரும் பணிகளைப் பாராட்டி ஏழாலை மக்கள் விழா எடுப்பது மகிழ்ச்சிக்குரியது. சைவமும், தமிழும் எமது இருகண்கள் என்ற பண்டிதமணி ஐயா அவர்களின் வாக்குக்கு அமைய திரு. சிவசண்முகவடிவேல் அவர்கள் சிறந்த பௌராணிகராகவும் அமைதியான சைவப்பிரசாரகராகவும் ஓதுவாரகவும் யாழ்ப்பாணத்திலுள்ள பல சைவ ஆலயங்களுக்கும் சென்று பணியாற்றி வருகின்றார்.

இவரது தமிழ்ப்பணியும் சைவப்பணியும் மேலும் சிறக்க எல்லாம்வல்ல பார்வதி பரமேஸ்வரனின் திருவருளைப் பிரார்த்திப்போமாக.

**ஆ. மகாலிங்கர்,**
பிரதேச செயலர்/மேலதிக அரசாங்க அதிபர்,
வலி - தெற்கு, உடுவில்

## பட்டமளிப்பும் பாராட்டு விழாவும்

இடம்: ஏழாலை முத்தமிழ் மன்றம்
காலம்: **16-10-1994** ஞாயிறு
மாலை 6மணி

தலைமை: திரு நா. இலட்சுமிகாந்தன்
(தலைவர், ஏழாலை முத்தமிழ் மன்றம்)

### நிகழ்ச்சி நிரல்

இறைவணக்கம்:
டாக்டர் கு. விக்னேஸ்வரன் அவர்கள்

மௌன அஞ்சலி:

மங்கள விளக்கேற்றல்:
டாக்டர் பே. பத்மநாதன் அவர்கள்
திரு. பா. வைத்திலிங்கம்
(தலைவர், ஏழாலை மேற்கு ஸ்ரீவிநாயகர் ஐக்கிய நாணய சங்கம்)
திருமதி பி. தவகுமார்
(தலைவர், ஏழாலை முத்தமிழ் மன்ற சனசமூக நிலையம்)

மன்ற பாடல்: மாதர் அணி
மேளக்கச்சேரி: திரு. பாலகிருஷ்ணன் குழுவினர்
பண்ணிசை: மகளிர் அணி

வரவேற்புரை:
திரு. வ. பேரின்பநாயகம்
(காசாளர் - சுன். ப. நோ. கூ. சங்கம்)

தலைமையுரை:
திரு. சி. கந்தசாமி
(முன்னாள் செயலாளர், விவேகானந்த சபை)
திரு. நா. நடேசன்
(அதிபர், ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை)
திரு. சி. சக்திகிரீவன்
(கிராம சேவையாளர்-ஏழாலை மேற்கு)
திரு. இ. இராசேஸ்வரன்
(அமைப்பாளர், ஏழாலை முத்தமிழ் மன்ற விளையாட்டுக் கழகம்)
செல்வி மா. மதுமதி (மாணவி)

★ பட்டமளித்து அருளுரை வழங்குதல்:
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்
(நல்லை ஆதீனம்)

★ பாராட்டு பத்திரம் வாசித்து வழங்குதல்:
கவிமாமணி வீரமணி ஐயா

பொன்னாடை போர்த்தலும் ஆசியுரை வழங்குதலும்:
கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன்
(தலைவர், இந்துநாகரிகத்துறை யாழ். பல்கலைக்கழகம்)

ஆசியுரை:
சிவாகம கலாநிதி சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள்
துர்க்காதுரந்தரி -
செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஜே. பி.

பாராட்டுரை:
திரு. ஆ. மகாலிங்கம்
(பிரதேச செயலர் / மேலதிக அரசாங்க அதிபர், உடுவில்)
திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம்

விழாநாயகன் உரை:

### கலை நிகழ்ச்சிகள்

வில்லிசை — இளைஞர் அணி ஏழாலை முத்தமிழ் மன்றம்
நடனம் — மகளிர் அணி
நாடகம் — "தன்னை வென்ற தலையாய அன்பு" (சமய நாடகம்)
தயாரிப்பு: ஏழாலை முத்தமிழ் மன்றம்

நன்றியுரை:
திரு. க. மகாதேவன்
(செயலாளர், ஏழாலை முத்தமிழ் மன்றம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

— ஏழாலை முத்தமிழ் மன்றம்.


## ★ வாழ்த்துகின்றோம் ★

| | |
|---|---|
| இலட்சுமி ஸ்ரோஸ் | ஏழாலை |
| இலங்காபதி ஸ்ரோஸ் | ஏழாலை |
| ஓர் அன்பர் | ஏழாலை |
| துரை வெதுப்பகம் | சூராவத்தை |
| மணியம் ஸ்ரோஸ் | சூராவத்தை |
| யோகா வெதுப்பகம் | மயிலங்காடு |
| பல் பொருள் வாணிபம் | மல்லாகம் |
| லிங்கம் மிதி வண்டி விற்பனை நிலையம் | மல்லாகம் |
| விக்னேஸ்வரா ஸ்ரோஸ் | சுன்னாகம் |
| வேல் மோட்டேர்ஸ் | யாழ்ப்பாணம் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்


### விற்பனைக்கு

கேர்(F)போம் பிறசியர்ஸ், சில்வர் சில்ட் சொக்ஸ் வகைகள், பெனியன்கள், நூல் எலாஸ்டிக் வகைகள், யட்டிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. சிறிமுருகன், 303, காங்கேசன்துறை சாலை, யாழ்ப்பாணம். (33334)

சிவம் தீபாவளி வாழ்த்து மடல் மற்றும் St. Micheal தீபாவளி நியூகலா வாழ்த்து மடல் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள ஸ்ரீகாந் புத்தக சாலை, யாழ்ப்பாணம், மக்மிலன் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (சி-9504)

### கோழிக்குஞ்சு விற்பனை

3 கிழமை நிரம்பிய Prima Hyline Brown சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி நல்லூர். (33321)

Golden Comet சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் பதிவு செய்து 19-10-94 புதன் கிழமை பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (33323)

18-10-94 செவ்வாயும், புதனும் பிறிமா புறொயிலர் இறைச்சிக் குஞ்சுகள் 42 ரூபா படியும் பிலிமத் கறுப்பு வரிக் குஞ்சுகள் 30 ரூபா. தனிச் சிவப்பு இறைச்சிக் குஞ்சுகள் 35 ரூபா/- வெள்ளை சேவல் குஞ்சுகள் 12 ரூபா படியும் பெற்றுக் கொள்ளலாம். உடுவில் மகளிர் கல்லூரிக்கு முன் மல்வம் வீதியூடாக சிங்கம் லேன், உடுவில். (7670)

### இறைச்சிக் கோழி

புறொயிலர் இறைச்சிக் கோழி விற்பனைக்குண்டு. தினமும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். 382, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (33359)

### புறொயிலர் மலிவு

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. இல. 7, நிக்கலஸ் ஒழுங்கை, கச்சேரி நல்லூர் வீதி, சுண்டிக்குளி. (33348)

### விடு தேவை

ஆனைப்பந்திக்கும் நீர் வேலிக்கும் இடையில் பருத்தித்துறை றோட்டிற்கு அண்மையில் சிறிய வீடு அல்லது அனெக்ஸ் தேவை. நேரிலோ அல்லது கடிதம் மூலமோ தொடர்பு கொள்ளவும். ஸ்கைலைன்ஸ், 281 B, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (7961)

நல்லூர் ஆனைப்பந்தி கந்தர்மடம் ஆகிய இடங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் குடும்பம் ஒன்றிற்கு வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு: 54/12, குறோசெற் லேன், கச்சேரி நல்லூர் றோட், யாழ்ப்பாணம். (33351)

### டில்கா வாச் வேக்ஸ்

சகல மணிக்கூடுகள், றேடியோக்கள் திருத்திக் கொள்ளவும், மணிக்கூடுகளை உதிரிப் பாகங்களுக்காக விற்றுக் கொள்ளவும் டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ், மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை. கண்டி வீதி சாவகச்சேரி. தலைமையகம் 284, ஸ்ரான்லி வீதி, (ஆரியகுளம் சந்தி, வானவில் அருகில்), யாழ்ப்பாணம். (சி-9514)

### தவறிவிட்டது

எனது அடையாள அட்டையும் [276201050 V] பிறப்புச் சான்றிதழும், பிரயாணப் பையுடன் 12-10-94 அன்று பூநகரியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து சிவபாக்கியம் சின்னத்துரை, கே. கே. எஸ். வீதி, கோண்டாவில் சந்தி கோண்டாவில் என்னும் விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (33362)

### தேவை

வயோதிபத் தம்பதிகளுக்கு சமைக்கவும், வீட்டைப் பராமரிக்கவும், வீட்டோடு இருக்கத் தகுந்த பெண் உதவியாள் உடன் வரவும். சம்பளம் பேசிக் கொள்ளலாம் இல. 25, மாட்டின் வீதி, யாழ்ப்பாணம்.. (33316)

### இறைச்சிக்கோழி விற்பனை

Broiler இறைச்சிக் கோழிகள் தினமும் காலை 7-00 மணி தொடக்கம் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (33322)

### இலவச சிகிச்சை

இலவச அக்குபஞ்சர் சிகிச்சை வட இலங்கை அக்குபஞ்சர் சங்கத்தால் தினமும் காலை 8-30—12-30 வரை சகல நோய்களுக்கும், இல. 35, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் பெற்றுக் கொள்ளலாம். (33332)

## நம்பிக்கையின் சின்னம் அண்ணா

ANNA

✶ இலகு இட்லி மா

✶ இலகு தோசை மா

காலம் பெறுமதியானது, காலத்தை வீணாக்காது

மேல் குறிப்பிட்டவைகளை வாங்கிப் பாவித்து உங்கள் பொன்னான நேரத்தை மீதப்படுத்துங்கள்.

அண்ணா தொழிலகம் இணுவில். (சி-9515)

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

A/L 94 பரீட்சை எடுத்த மாணவர்களுக்கு மீட்டல் Sat, Sun. Classes

ஆரம்பம்: 16 - 10 - 94 (இன்று)

நேர அட்டவணை

| | |
|---|---|
| 7-00, 8-00 | புவியியல்/அரசியல் |
| 8-00, 9-00 | இந்துநாகரிகம் |
| 9-00, 10-00 | அளவையியல் |
| 10-00, 11-00 | பொருளியல் |
| 11-00, 12-00 | வர்த்தகம் |
| 12 00, 1-00 | தமிழ் / கணக்கியல் |

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்களினால் போதிக்கப்படுகின்றது.

பக நேர வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன சி/9508)


சிவமயம்

## ★ திருமண அழைப்பு ★

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பவ ஆண்டு ஐப்பசித் திங்கள் 7ஆம் நாள் (24 — 10 — 1994) திங்கட்கிழமை பகல் 12-00 — 1-00 மணி வரையுள்ள மகர லக்கினம் கூடிய சுபயோக சுபமுகூர்த்தத்தில் நல்லூர் திவ்விய ஜீவன மண்டபத்தில்.

எமது சிரேஷ்ட புத்திரன் திருநிறை செல்வன் **உமாகரன்** அவர்களுக்கும்

எமது கனிஷ்ட புத்திரி திருநிறை செல்வி **கஸ்மதி** அவர்களுக்கும்

திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராக வருகை தந்து, மணமக்களை ஆசிர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

★ தங்கள் நல்வரவை நாடும் ★

திரு. திருமதி கணேசபிள்ளை குடும்பத்தினர், கொய்யாத்தோட்டம், இருபாலை, கோப்பாய்.

திரு. திருமதி இராசையா குடும்பத்தினர், V. H. லேன், இருபாலை, கோப்பாய்.

✶ வரவேற்பு உபசாரம் 25 - 10 - 1994 செவ்வாய்க்கிழமை மாலை 4 00 மணி தொடக்கம் மணமகன் இல்லத்தில் நடைபெறும்.

## 7ஆம் ஆண்டு நினைவலைகள்



தாயின் மடியில்: 20 — 04 — 1926

இறைவன் அடியில்: 04 — 10 — 1987

### திருமதி அன்னமுத்து தம்பிராசா

திதி: 16 — 10 — 1994

ஆண்டு ஏழானதுவோ
ஈண்டு எமை நீர் பிரிந்து
மீண்டும் வர முடியாது
யாண்டும் எம் நெஞ்சில் இருப்பீர்.

உங்கள் ஆன்ம ஈடேற்றத்திற்காகப் பிரார்த்திக்கும்;

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம். (சி/ 5730)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 15 — 03 — 1927

உதிர்வு: 21 — 09 — 1991

### அமரர் சீனிவாசகம் முருகையா

(இளைப்பாறிய பிரதம லிகிதர். அரசினர் வைத்தியசாலை, தெல்லிப்பளை)

திதி 16 - 10 - 1994

அன்பிற்கோர் அன்னையாய்
அறிவூட்டற்கோர் தந்தையாய்
அனைத்திற்குமோர் தெய்வமாய் விளங்கிய–
ஆருயிரே அணையா விளக்கே!

உங்கள் பிரிவால் துயருறும்:

மனைவி, மக்கள், மருமக்கள்-
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்,

'கிருஷ்ண வாசா',
பன்னாலை,
தெல்லிப்பழை. (33298)

## 1 ஆம் ஆண்டின் பாச நினைவுகள்



ஜனனம்: 11 — 01 — 1988

மரணம்: 27 — 09 — 1993

### ஸ்ரீசந்திரன் ஜனகன்

எங்கள் வானத்து முழுநிலவே!
நீ சென்ற திசைநோக்கி உன் அம்மம்மா
நித்தம் புலம்புகிறாள்
உன் நினைவுகளை நினைந்து நினைந்து
தாத்தா கலங்குகிறார்
உன் எழில்வதனம் பார்த்து முத்தமிட – உன்
அம்மா உன்னைத் தேடுகிறாள்
அப்பா அப்பா என்று ஆயிரம் தடவை நீ
அழைத்த அன்பு வார்த்தைகளை அப்பா
கேட்பதெப்போ
அன்ரியும் சித்திமாரும் அன்பு ஜனாக்குட்டியை
அணைத்தெடுக்க அழுகின்றனர்
மாமாமார் மருமகனை எண்ணி
மாய்ந்துவிட்டனர்
ஐயா! ஜனாக்குட்டி! ஜனாக்குஞ்சு
உன்னை எங்களிடமிருந்து பறித்தவர்க்கு
இறைவனே தண்டனை வழங்கட்டும்.

உன் நினைவால் நித்தம் கண்ணீருடன் வாழும்;

அம்மம்மா, தாத்தா, அம்மா,
அப்பா, அன்ரி, சித்திமார்,
மாமாமார்.

(7960)

## சீரிய நெறிகளைக்....

[3 ஆம் பக்கத் தொடர்ச்சி] கூறுதல், மனம்நோகக் கூறுதல் என்பன அவர் பேசாதவை. தீய, துன்பந்தரும் செயல்கள் அவர் செய்யாதன. ''என் கடன் பணி செய்து கிடப்பதே'' என்ற வாகீசர் வாக்குக்கு இணங்கவும், மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகெலாம், என்ற கச்சியப்பர் கருத்துக்கு ஏற்பவும் சமயப் பணியாற்றி வரும் திரு. சண்முகவடிவேல் அவர்கள் சைவமக்கள் வாழும் சகல நாடுகளிலும் தனது பணியை விரிவாக்க இறைவன் அருள்புரிவாராக. ★

## அறிவித்தல்

யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்வியியற் துறையின் கல்விக் கழகத்தினால் கலை ஞானம் இதழ்-5 18-10-1994 செவ்வாய்க்கிழமை காலை 9-00 மணிக்கு கைலாசபதி கலை அரங்கில் வெளியிடப்படவுள்ளது என்பதை கல்விக் கழக உறுப்பினர்களுக்கும் அனைத்து ஆர்வலர்களுக்கும் அறியத் தருகின்றோம்.

ஏற்கனவே பணம் செலுத்திய அங்கத்தவர்கள் அன்றே தங்களுக்குரிய கலை ஞானத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

கல்விக் கழகம்,
கல்வியியற்றுறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
(33358)


## G. S. Q. புள்ளிவிபரவியல் பாடக்குறிப்புகள் தேவை

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் G. S. Q. புள்ளிவிபரவியல் பாடநெறியை வெளிவாரியாக கற்கும் வெளிநாட்டிலுள்ள மாணவர் ஒருவருக்கு தூய கணிதம், பிரயோக கணிதம் புள்ளி விபரவியல் பாடக் குறிப்புகள் (1ஆம் வருடம்) தேவை.

தகுந்த விலை தரப்படும்.

உடன் தொடர்பு கொள்க.

இல. 706, மே/பா உதயன்,
யாழ்ப்பாணம். (33305)

## DIPLOMA IN NURSING
## தாதியர் பயிற்சி நெறி

10 - 11 - 1994 இல் ஆரம்பமாகின்றன.

1. கல்வித் தகைமை க.பொ.த. (சாதாரணம்)
2. காலம் 6 மாதங்கள்
3. விசேட மருந்தியல், பார்மஸி பாடங்கள் உள்ளடக்கப்பட்டன.
4. வைத்தியசாலை செய்முறைப் பயிற்சி
5. மாவீரர், போராளிகள் குடும்பத்தவருக்கு இலவசக் கல்வி.

சாயி மருத்துவக்கல்லூரி

இல. 10,
பருத்தித்துறை வீதி,
(அரச தாதியர் பாடசாலை முன்பாக)
யாழ். நகர்

[சி-9393]



## தமிழின்பக் கண்காட்சி - 94

இடம்: யாழ். இந்துக்கல்லூரி
காலம்: 15, 16, 17, 18ஆம் திகதிகளில்

மில்க்வைற் உற்பத்திகள் காட்சிக்கும், விற்பனைக்கும்.

அன்பளிப்பு:
ரூபா 50/-க்கு மேல் கொள்வனவுக்கு பயனுள்ள மாக்கன்று ஒன்று.

(சி-9334) — ''மில்க்வைற்''


## 31-ம் நாள் நினைவஞ்சலி

மண்ணுயிரைக் காத்த எங்கள் கிராம உத்தமன்
அமரர்
வைத்திய கலாநிதி
### சுப்பிரமணியம் பொன்னம்பலம்

அகவற்பா

தர்மம் போற்றுஞ் செல்வரைப் பெற்றும்
தமிழைப் போற்றும் அறிஞரைப் பெற்றும்
அன்பைப் போற்றும் பண்பினைப் பெற்றும்
விளங்கும் நற்பதி கருகம் பனைப்பதி
அத்தகு பதியின் அரும்பெருங் குடியில்
தோன்றிய பெருமகன் சுப்பிரமணியம்
பெற்றதாஞ் செல்வமே பொன்னம்பலம்தாள்
கல்வியால் உயர்ந்தும் கடமையாற் சிறந்தும்
மருத்துவ உலகும் மற்றுளோர் தாமும்
போற்ற வாழ்ந்தார் பொன்னம் பலமே
மருத்துவத் தொழிலை உயிரென மதித்து
இரவும் பகலும் பெரும்பணி புரிந்து
தமிழினம் வாழ உழைத்த தெய்வம்
நாமெலாங் கண்ணீர் மல்கும் வண்ணம்
வானடைந் ததுவே வணங்குகின் றோமே.

கருகம்பனை நித்தியானந்த-
சி. க. கூ. சங்கம்,
கருகம்பனை.
(7964)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.


## ஆலயங்களில் ஆபத்து!

இன்று பல கோவில்களின் பரிபாலனம் காவல்துறையின் கண்காணிப்பில் உள்ளது. பரிபாலன சபைத் தெரிவுகள் காவல்துறையினராலேயே நடத்தப்படுகின்றன. அவர்கள் தமது பணிகளின் மத்தியில் கோவில் பிரச்சினைகளைச் சமாளிப்பதற்குப் பெரும் சிரமப்படுகிறார்கள். ஏன் இந்த நிலை...? இது குறித்து ஆலய அறங்காவலர்கள் சிந்திக்கவேண்டும்.

இவ்வாறு ஆலய நிர்வாகங்கள் குறித்துக் கவலை தெரிவித்திருக்கிறார் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஆலயங்களுக்குக் குறைவில்லை. ஒரு சிறிய கிராமத்திலேயே குறைந்தது பத்து ஆலயங்களாவது இருக்கும். இவை இப்பகுதியில் வாழும் சைவத் தமிழ் மக்களின் ஆன்மீக நாட்டத்தை, பக்தி மார்க்கத்தைப் பிரதிபலிக்கின்றன என்று பெருமைப்படுவதற்கு இல்லை.

காரணம்: ஆலயங்கள், மும்மலங்களைத் துறந்து, ஆன்மாவை ஒடுக்கி ஆண்டவன் அருள் வேண்டி, அவன் அடி நாடி வணங்கும் இடங்களாக அன்றி, பொறாமையும், பூசலும், சச்சரவும் மலிந்த இடங்களாகிவிட்டன. ''நான்'' என்ற அகந்தையும் ஆணவமும் நீங்க வேண்டிய ஆலயங்கள், எல்லாம் நானே, யாவும் என்னுடையதே. நானே உரித்தாளி, நானே அதிகாரமுடையவன் என்று பல ''நான்''களை உருவாக்கும் கோவில்களாக மாற்றப்பட்டுவிட்டன!

எல்லோருக்கும் மேலான ஒருவன், எல்லாரையும் விட வல்லமை — அதிகாரம் உள்ள ஒருவன், எல்லாவற்றையும் உரித்தாக உடைய ஒருவன் ஆலயத்திலேயே இருக்கிறான் என்பதை மறந்து மக்கள் தாங்களே மேலானவர்களாக நடந்து கொள்கிறார்கள்.

குறிப்பிட்ட ஆலயம் யாருக்குச் சொந்தமானது; பரிபாலனம் யாரிடம் இருக்கவேண்டும்; வருமானத்தை யார் கையாளவேண்டும்; என்பன குறித்து பிணக்குகளுக்குக் குறைவில்லை. ஆலயங்கள் அதிக வருமானம் தரும் இடங்களாக மாறிவிட்டன, ஆனால் அங்கு சேரும் பணத்தை தெய்வ காரியத்துக்கும் தர்ம காரியத்துக்கும் பயன்படுத்துவதில் நாட்டமின்றி, சொந்தத் தேவைக்கு யார் ''சுருட்டிக் கொள்வது'' என்பதிலேயே பலரும் மோதிக் கொள்கிறார்கள்.

இந்தப் பணச் சண்டையே, ஆலயங்களில் உண்டாகும் பல சச்சரவுகளுக்கும், சண்டைகளுக்கும் மூலவிசையாக உள்ளது. பல ஆலயங்களின் நிர்வாகங்கள் குரங்கின் கைப் பூமாலைகளாகப் பிய்த்து எறியப்படுகின்றன. ஆலயச் சொத்துக்களைச் சூறையாடுவதற்கு என்றே சிலர் நிர்வாகங்களுக்குள் நுழைந்து விடுகிறார்கள்.

இத்தகைய காரணங்களாலேயே பரிபாலன சபைத் தெரிவுகள் காவல்துறையினரின் கண்காணிப்பில் நடைபெறவேண்டியதாயிற்று. இவ்வாறான நிலைமை உருவாகியிருப்பது சைவ சமயத்துக்கு ஏற்பட்டிருக்கும் பேராபத்துக்களில் மிகப் பெரியது.

ஆலயங்களில் ஏற்படும் நிர்வாக, நிதிச் சண்டைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க சட்டங்கள், ஒழுங்கு விதிகள் உதவுமா? அவை தேவையா? சட்டம் போட்டு இவர்களைத் திருத்த முடியுமா? சட்டம் போட்டு தடுக்கிற கூட்டம் தடுக்க முயன்றாலும், திட்டம் போட்டுத் திருடும் கூட்டம் இருக்கவே செய்யும். திருடனாகப் பார்த்துத் திருந்தாவிடில் சட்டத்தால் என்ன செய்யமுடியும்?

ஆலயச் சொத்து அறச் சொத்து. ஆலயம் அறம் வளரவேண்டிய இடம். அதனை புனித இடமாக்கி சமயத்தின் பெருமையை நிலைநாட்ட மக்கள் தாமாகவே முன்வரவேண்டும். இதனை ஆலயம் தொடர்பாக சச்சரவுப் படுவோர் உணர்வதும், உணர்ந்து செயற்படுவதும் எப்போது?

ஆலயங்கள் சச்சரவுகளின் பிறப்பிடங்களாகத் தொடர்ந்தால் அவற்றை, மக்கள் புறக்கணிக்கும் நிலை உருவாகும் என்பதனை எவரும் மறந்து விடலாகாது.

# பெரிதாகப் பெறுபேறுகள் வெளியே தெரியவில்லை
# எனினும் மறைமுக நல்விளைவுகள் பலவும் உண்டு

# புலிகள் - அரசு பூர்வாங்கப் பேச்சு சமாதான முயற்சியின் நல்லசகுனம்

வந்தார்கள்; பேசினார்கள்; சென்றார்கள்; மீண்டும் வருவார்கள்.

ஆம் சந்திரிகாவின் — சந்திரிகா அரசாங்கத்தின் — பிரதிநிதிகள் நால்வர் கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணம் வந்தார்கள். இரண்டு தினங்கள் — பத்தொன்பது மணித்தியாலங்கள் — யாழ். நகரில் தங்கிநின்ற அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் பன்னிரண்டு மணித்தியாலங்கள் பேசினார்கள். சென்றுவிட்டார்கள். மீண்டும் பத்து நாட்களில் சில முடிவுகளோடு வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக்காணும் முயற்சியில், கடந்த வியாழன், வெள்ளிக்கிழமைகளில் இங்கு நடைபெற்றது பூர்வாங்கப் பேச்சுக்களின் முதற் கட்டமே. இப்பேச்சுவார்த்தை பூர்வாங்கமானதாக இருந்தபோதிலும், இலங்கை அரசியல் வரலாற்றில் மிகவும் முக்கியமானதும், புதிய திருப்பு முனையுமாகும்.

இனப்பிரச்சினை இன்று நேற்று உருவானது அல்ல. அதேபோல இரண்டொரு கட்டப் பேச்சுவார்த்தைகளோடு தீர்வு காணக்கூடியதும் அல்ல. இலங்கைக்குச் சுதந்திரம் கிடைப்பதற்கு முன்னரே தமிழர்களை இந்த நாட்டில் இரண்டாம் தரப் பிரசைகளாக்கவும், அடிமைகளாக்கவும் திட்டமிட்டுச் செயற்பட்டு வந்தார்கள் சிங்களத் தலைவர்கள்.

ஆனால் தமிழர்கள் சும்மா இருந்துவிடவில்லை. தாமும் இந்த நாட்டில் சம உரிமையுள்ள சம அந்தஸ்துள்ள மக்களாக வாழ வேண்டும் என்று கோரி அன்றே போராடத் தொடங்கிவிட்டார்கள்.

இந்த ஐந்து தசாப்த காலத்தில், தமிழர்களின் பல உரிமைகள் பறிக்கப்பட்டுவிட்டன. சரியாகச் சொல்வதானால் தமிழ் மக்களின் அடிப்படை வாழ்வுரிமைகள் யாவும் பறிக்கப்பட்டு அடிமை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். அதனால் தமிழ் மக்களின் போராட்டம் காலத்துக்குக் காலம் வெவ்வேறு வடிவங்களை எடுத்து, இப்போது ஆயுதப் போராட்ட வடிவத்தை அடைந்திருக்கிறது. ஆயுதப் போராட்டத்திலும் கூட பல்வேறு சாதனைகளைப் படைத்து, புதிய புதிய பரிமாணங்களைக் கண்டு வருகிறது.

இலங்கையில் தமிழர்கள் எண்ணிக்கையில் குறைந்தவர்கள் தான். அதற்காக அவர்கள் அடிமைகளாக, உரிமை அற்றவர்களாக, இரண்டாம் தரப் பிரசைகளாக வாழத் தயாரில்லை. ஆட்பலம் குறைவாக இருந்தாலும் அவர்களது மனோபலம் சக்திமிக்கது. அந்த பலத்தின் வெளிப்பாடே அரசாங்க இராணுவப் படையையும் தோற்கடித்து நிற்கிறது.

### புரிந்து கொள்ளத் தவறின

தமிழர்களின் இந்த மனோபலத்தை வெல்வது கடினம் என்ற யதார்த்தத்தை சிங்கள அரசியல் தலைவர்களும், பேரினவாத சக்திகளும் இதுவரை புரிந்து கொள்ளத் தவறிவிட்டன. அதன் விளைவாகவே இனப்பிரச்சினை ஐம்பது வருட காலமாக நீடித்து வருகிறது. 1956 இல் தமிழர் பிரச்சினை தீவிரமடைந்த பின்னர் சிங்களத் தலைவர்களுக்கும் தமிழ்த் தலைவர்களுக்கும் இடையில் பல பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. பல ஒப்பந்தங்களும் செய்யப்பட்டன. ஆனால் பிரச்சினை தீர்ந்தபாடில்லை. நியாயமான தீர்வு எதனையும் நடைமுறைப்படுத்த விடாது பேரினவாதம் தடைபோட்டது. அதனால் நிலைமை மிக மோசமடைந்து உயிர் அழிவுகள், உடைமைச் சேதங்கள், அவல வாழ்க்கை, நிம்மதியற்ற போர்ச்சூழல் என்ற மிகவும் பயங்கரமான, சோகமான அளவுக்கு வளர்ந்து விட்டது. இது எல்லோருக்கும் தெரிந்தவை. காலக் கண்ணாடியில் மிகத் துலாம்பரமாகத் தெரிபவை.

எனினும் முந்திய அரசாங்கம், பேரழிவுகள், அவலத் தங்கள் உட்பட்ட சகல அம்சங்களையும், மக்கள் அவலங்களையும் யதார்த்தத்தையும் உணர மறுத்தது. நிலத்துக்குள் தலையைப் புதைக்கும் தீக்கோழியாக இராணுவத் தீர்வை நாடியது. பதினொரு வருடங்களுக்கு மேலாக அது இராணுவத் தீர்வு வழி வேகமாகவும், வெறித்தனமாகவும் நடந்த போதிலும் தமிழ் மக்களின் மனோபலத்தைத் தோற்கடிக்க முடியவில்லை. அடக்கு முறையாலும், இராணுவ ஆதிக்கத்தாலும் தமிழர்களை எதுவும் செய்துவிட முடியாது என்பதனை ஆகப் பிந்திய விஜேதுங்கா அரசு கண்டு கொள்ள மறுத்தது. தமிழர்களின் பிரச்சினை இனப்பிரச்சினை அல்ல; பயங்கரவாதப் பிரச்சினை என்று 'பட்டமும்' சூட்டியது!

இத்தகைய பின்னணியில் தான், சந்திரிகா என்ற புதிய தாரகை சிங்கள அரசியல் வானில் ஒளிவிடத் தொடங்கியது. கால ஓட்டத்திற்கு ஏற்ப, நாட்டு நிலைமையை புதிய கோணத்திலும், புதிய வடிவிலும் பார்க்கத்தொடங்கினார் சந்திரிகா.

தமிழர் பிரச்சினை இனப்பிரச்சினையே. அதற்கு அரசியல் தீர்வு காண்பதே உகந்த வழி என்ற கொள்கையை சிங்கள மக்கள் மத்தியில் முன்வைத்தார் சந்திரிகா. பொதுத் தேர்தலின் போது அந்தக் கொள்கையை தென்னிலங்கை மக்கள் ஆதரித்தார்கள். தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு ஆணை கொடுத்தார்கள்.

### புதிய போக்கு

சிங்கள மக்களின் அந்த ஆதரவை ஆதாரமாகக் கொண்டு, சந்திரிகா இனப்பிரச்சினை விவகாரத்தில் முற்றிலும் புதிய அணுகு முறையை கைக்கொள்ள முன்வந்தார். நாட்டு நிலைமையையும், போரின் விளைவையும், தளர்சூழலையும் நன்றாக அவதானித்து அதற்கேற்ற விதத்தில் தமது புலோபாயத்தை வகுத்துக் கொண்டார். அது எழுந்தமானமான ஒன்றல்ல. நன்கு திட்டமிடப்பட்டது. சகல அம்சங்களையும் மிக நுணுக்கமாக உள்வாங்கித் தயாரிக்கப்பட்ட அணுகுமுறையாக— உகந்த நடைமுறையாக — சந்திரிகாவின் போக்கு அமைந்துள்ளது.

விடுதலைப் புலிகளை தமிழர்களின் முதன்மைப் பிரதிநிதிகள் என்று அங்கீகரித்தார். அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி அரசியல் தீர்வு ஒன்றைக் காண விருப்பம் தெரிவித்தார். தமது நல்லெண்ணத்தை சுயமாகவே வெளியிட்டார். சொல்லோடு நிற்காமல் செயலிலும் காட்டினார். அதன் விளைவு தான் கடந்த வியாழன், வெள்ளிக்கிழமைகளில் யாழ்ப்பாணத்தில் சந்திரிகாவின் பிரதிநிதிகளுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற பூர்வாங்கப் பேச்சுக்கள்.

### சமாதானப் பயணத்தின் ஆரம்பம்

கடந்த வாரப் பேச்சுக்களை பத்தோடு பதினொன்றாவது என்று எடுத்துக் கொள்ளக்கூடாது. இது முற்றிலும் புதிய சூழ்நிலையில், புதிய அணுகுமுறையுடன் தீர்வு ஒன்றைக் காண வேண்டும் என்ற உள்ளார்ந்த நோக்கத்துடன் தொடங்கப்பட்டிருக்கும் சமாதானப் பயணத்தின் ஆரம்பம்.

இந்தப் பேச்சுவார்த்தையில் இரு தரப்பாரும் திறந்த மனத்தோடு தமது நிலைப்பாட்டை வெளிக்கொணர்ந்தார்கள். ஆரம்பம் சரியாக இருந்தால் தான் எந்த முயற்சியும் இறுதியில் வெற்றிகரமாகக் கைகூடும். அந்த வகையில் கடந்த வாரப் பேச்சுகள் ஆக்க பூர்வமாக நடந்தேறியிருப்பது மிகவும் குறிப்பிடத்தக்கது. மங்கள கரமான ஆரம்பம். நல்ல சகுனமாகவே அமைந்திருக்கிறது.

தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளைப் பொறுத்த வரையில் பேச்சுவார்த்தையில் பெரிதாக எதுவும் எட்டப்படவில்லை என்பது உண்மை தான். ஆயினும் பேச்சுக்களைத்தொடர்ந்து நடத்தி, இலக்கை அடைவதற்கான ஓர் நல்ல அத்திவாரம் இடப்பட்டிருக்கிறது என்பது நோக்கற்பாலது.

யாழ்ப்பாணத்துக்குப் பேச்சுவார்த்தைக்கு வந்தவர்கள் பிரதமரின் விசுவாசத்திற்குரிய அதிகாரிகள். எனவே அவர்கள் பேச்சுவார்த்தை மேசையில் வைத்து முக்கிய முடிவுகளை எடுக்க முடியாதவர்கள். இங்கே நடந்தவற்றை கொழும்பு சென்று பிரதமருக்கு எடுத்துக் கூறி அவர் தெரிவிக்கும் முடிவுகளை மீண்டும் இங்கே வந்து தெரிவிப்பார்கள்.

இதனால் தான், மேற்கத்திய பத்திரிகையாளர் ஒருவர் யாழ்ப்பாணம் வந்த அரசாங்கப் பிரதிநிதிகளை வெறும் தூதுவர்கள் (Messengers) என்று வர்ணித்தார். தீர்மானம் எடுக்கும் அதிகாரம் உள்ளவர்களின் பிரதிநிதிகளாக வரும் அதிகாரிகள், சில ஆணைகளுடன் வந்தாலும் முக்கிய விடயங்களில் முடிவு எடுக்க முடியாது என்பது புரிந்து கொள்ளப்பட வேண்டியதாகும்.

எப்படியோ, கடந்த வாரம் நடந்த ஆரம்பப் பேச்சு சுமுகமாகவும், ஆக்கபூர்வமாகவும் நடந்திருக்கிறது. இரு தரப்பாரும் தமது நிலைப்பாடுகளை மனம் திறந்து பேச அது உதவியிருக்கிறது. சிதைந்து போயுள்ள தமிழர்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளை அரசாங்கத் தரப்பினர் நன்கு அறிவதற்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

அது போலவே, தமிழ் மக்களும், அவர்களின் பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளும் சமாதானத்தை அடைவதில் எவ்வளவு பெரு விருப்புடையவர்களாக இருக்கிறார்கள் என்பதையும் அரச பிரதிநிதிகள் அறிந்து கொள்ள இந்தப் பேச்சுவார்த்தை உதவியிருக்கிறது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான பேச்சு நடப்பதற்கான சுமுக நிலைக்கு போர் நிறுத்தம் தேவை என்பதும், வடபகுதி மக்களின் கஷ்டங்கள் நீங்க போக்குவரத்துத் தடை நீக்கப்பட வேண்டும் என்பதும் அரச தரப்பாரிடம் தெளிவாக வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

மேலும் சந்திரிகாவின் உள்ளார்ந்த நோக்கம், பிரச்சினையைத் தீர்ப்பதில் அவருக்குள்ள ஆர்வம், தெற்கில் எழக்கூடிய எதிர்ப்புகளைச் சமாளித்துத் தமிழர்களுக்குரிய உரிமைகளை வழங்குவதில் உள்ள துணிச்சல் என்பன குறித்து விடுதலைப்புலிகள் மேலதிகமாக அறிந்து கொள்ளக்கூடிய, மதிப்பிடக்கூடிய ஒரு சந்தர்ப்பத்தையும் பேச்சுவார்த்தை நல்கியது எனலாம்.

### சந்திரிகா எதிர் நோக்கும் கஷ்டங்கள்

பேச்சுவார்த்தை முடிவில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையை உற்றுப்படித்தால் சந்திரிகாவும், அவரது அரசாங்கமும் எதிர்நோக்கும் சில கஷ்டங்களை அறிந்து கொள்ளலாம்.

போர் நிறுத்தம் செய்வது

**உதயகாந்தன்**

குறித்து, இப்போதுள்ள சூழலில் ஜனாதிபதி, பாதுகாப்பு அமைச்சு, இராணுவம் ஆகியவற்றை கலந்தாலோசிக்க வேண்டும் என்ற நிலையும்—

பூநகரிப் பாதையைத் திறப்பதற்குக் கூட இராணுவத்தின் ''அனுமதி'' பெற வேண்டும் என்ற நிலையும் — சந்திரிகா எதிர்நோக்கும் கஷ்டங்களுக்கு நல்ல உதாரணங்கள். நிறைவேற்று ஜனாதிபதி அரசாங்கக் கட்சியைச் சேராதவராகவும், அவரின் கீழேயே படைகள் செயற்படுவதும் இந்தக் கஷ்டங்களுக்குக் காரணம் என்பது எவருக்கும் புரியக்கூடியதே.

எனவே, தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும், அதற்கு உகந்த சூழ்நிலையைத் தோற்றுவிப்பதற்கும் சந்திரிகா அடுத்த மாதம் ஒன்பதாம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் வெற்றி வாகை சூட வேண்டியது அவசியமாகிறது அதனால் தமிழர்களின்வாக்குகள் சந்திரிகாவுக்கேசேரவேண்டும் என்ற ''கட்டாய தேவை'' ஒன்றும் உருவாகிறது. அவர் ஜனாதிபதியாக வந்தால், என்ன கஷ்டப்பட்டேனும், தமிழர்களுக்கு ஒரு தீர்வைத் தர முடியும் என்ற புதிய பரிமாணமும் தோன்றுகிறது.

ஆனால் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் தமிழர்களுக்குச் சாதகமான எதனையும் வழங்குவதாக சந்திரிகா வெளிப்படையாகச் சொல்ல முடியாது. அவ்வாறு சொன்னால் காமினியும், ஐ.தே. கவினரும் சும்மா இருக்கமாட்டார்கள். ஆகவே சந்திரிகாவின் இப்போதைய கஷ்டம் மெல்லவும் முடியாத விழுங்கவும் முடியாத நிலை தான்!

### தமிழர்களின் வாக்கு

இனப்பிரச்சினை சம்பந்தமாக தமிழர்களுக்கு எந்த வாக்குறுதியையும் குறிப்பிட்டுக் கூற முடியாத நிலையிலும் சந்திரிகாவுக்குத் தமிழர்களின் வாக்குத் தேவைப்படுகிறது. அவர் அதனை எப்படிப் பெறப் போகிறார்?

வடக்கில் இல்லாவிடிலும் கிழக்கிலும் தெற்கிலும், வாழும் தமிழர்களுடைய வாக்குகளைப் பெறுவதற்கு கடந்த வாரப் பேச்சுக்கள் பெரிதும் உதவும். யாழ்ப்பாணத்தில் அரசாங்கப் பிரதிநிதிகளுக்குக் கிடைத்த வரவேற்பும், முதற்கட்டப் பேச்சுக்கள் சுமுகமாகவும், முன்னேற்றகரமாகவும் அமைந்ததும் தெற்கு, கிழக்குத் தமிழர்களின் வாக்குகளைச் சந்திரிகாவுக்குப் பெற்றுக் கொடுக்கும்.

அது மட்டுமல்ல. வடக்கில் நடத்திய பேச்சுவார்த்தைகளையும், கிடைத்த வரவேற்பையும், தக்கபடி பிரசாரப்படுத்தினால் சிங்கள மக்களின் வாக்குகளையும் உறுதிப்படுத்திக் கொள்ளலாம். ரூபவாஹினிச் செய்தியாளர் யாழ்ப்பாண விஜயத்தை வைத்து விவரணச் சித்திரம் தயாரிக்கப் போவதும் இந்த நோக்கத்திற்காகத்தான்.

எனவே, யாழ்ப்பாணத்தில் கடந்த வாரம் நடந்த புலிகள் — அரசு பூர்வாங்க சமாதானப் பேச்சு வெளிப்படையாகப் பெறுபேறுகளைத் தந்ததாகத் தெரியவில்லையாயினும், மறைமுகமாக நல்ல விளைவுகளைத் தந்துள்ளது. சந்திரிகாவைப் பொறுத்த வரையில் சாதகமான பயன்தான். யாழ்ப்பாணத்தில் இருந்து 'பக்ஸ்' செய்தி கிடைத்ததும், சந்திரிகா, பொன்னம்பலவாணேசர் ஆலயத்துக்குச் சென்று வழிபட்டிருப்பது தனது முயற்சி மேலும் முன்னேறிச் செல்ல வேண்டும் என்பதற்காகவும், தேர்தலில் தமக்கு வெற்றி கிடைக்க வேண்டும் என்பதற்காகவுமே...

இரண்டாம் கட்டப் பேச்சுக்கு வருமுன்னர் யுத்த நிறுத்தம் கொண்டுவர முயற்சிக்கப்படும் என்று யாழ்ப்பாணம் வந்த அரசாங்கப் பிரதிநிதிகளில் ஒருவரான ராஜன் ஆசீர்வாதம் தெரிவித்திருப்பதும் —

அரசின் தீர்வு முயற்சிக்கு ஒத்துழைப்பும் ஆதரவும் வழங்குமாறு இராணுவத் தளபதி ஜெரி டி. சில்வா தமது படைகளைக் கேட்டிருப்பதும் — மேலும் நல்ல குறி சொல்வதாகவே உள்ளது.

அந்தக் 'குறி' பொய்க்காது நடந்தால், வடக்கில் ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கு அனுமதி தருமாறு பத்து நாட்களில் நடக்கும் இரண்டாம் கட்டப் பேச்சுக்களின் போது சந்திரிகாவின் பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளிடம் கேட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

★

# தென்னைப் பயிர்ச்செய்கைக்கான சில தொழில்நுட்ப ஆலோசனைகள்

*தென்னைச் செய்கையாளர்கள் தென்னை சம்பந்தமான இலவச ஆலோசனைகளையும் தங்களுக்குத் தேவையான தென்னங்கன்றுகளையும் பெறுவதற்கு யாழ்.மாவட்டதென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. ஜெ. சத்தியேந்திரனிடம் நல்லூர் கமநல சேவை நிலையத்தில் புதன்கிழமைகளில் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.*

தற்போது மழைகாலம் ஆரம்பித்துள்ளமையால் வீட்டுத் தோட்டத்திலும், பெரிய அளவிலான தோட்டங்களிலும் புதுநடுகை, மீள், கீழ் நடுகையாகவும் தென்னங் கன்றுகளை நாட்டலாம். எந்த வர்க்கமான தென்னைகளாயினும் சரி, தெரிவு செய்யப்பட்ட தாய் மரங்களிலிருந்து பெறப்பட்ட விதைத் தேங்காய்களை அதற்குரிய தொழிநுட்ப முறையில் நாற்று மேடை போடப்பட்டு சிறந்த தென்னங்கன்றுகளை விநியோகிக்கும் இடங்களிலிருந்தே வாங்கி நடுகை செய்வது சாலச்சிறந்தது.

தென்னைகளில் உள்ளூர் இனம்(உயிரினம்), கலப்பினம் (DXT) செவ்விளநீர் இனம் எமது பிரதேசத்திற்கு பொருத்தமானதாகும். கலப்பின, செவ்விழநீர் வர்க்க தென்னைங் கன்றுகளைக் குறிப்பாக வீட்டிலே 3 அல்லது 4 கன்றுகளை நாட்டி சிறந்த முறையில் பராமரிப்பதன்மூலம் முறையே 3½, 5 வருடங்களில் விளைவினைப் பெறமுடியும். கலப்பின வர்க்கத் தென்னங் கன்றுகளை நாட்டும்போது, ஈரலிப்பு எந்த நேரமும் இருக்கும் இடமாகத் தெரிவு செய்து நாட்டுதல் வேண்டும். உயர் வர்க்கம் பெருந்தோட்டங்களிலும், அல்லது வீட்டுத் தோட்டங்களிலும் நாட்டலாம். இது பலன் தரக் கிட்டத்தட்ட 5-6 வருடங்கள் எடுக்கும்.

### தென்னை நடுகைமுறை

எந்த வர்க்கமான தென்னங்கன்றுகளாயினும் சரி, நடுகை முறையில் வேறுபாடு இல்லை. நடுகைக் செய்வதற்குரியசாணியை தெரிவுசெய்து துப்பரவாக்கி, நடுகைக் குழிகளைத் தயார் செய்தல் வேண்டும். நடுகைக் குழியின் அளவு [illegible] வேறுபடும். [illegible] கிடையில் [illegible] செய்கை செய்யும் நோக்கத்துடன் நடுகை மேற்கொள்வதாயின், சதுர முறையில் இரண்டு தென்னைகளுக்கு இடையேயான இடைவெளித் தூரம் 26 அடிX 26 அடி ஆகவும், ஏனைய பிறவாயின், 22 அடிX 22அடி தூர இடைவெளியிலும் ஏக்கருக்கு முறையே 64,90 கன்றுகளை நாட்டலாம். எனவே, மேற்குறிப்பிட் அளவுகளில் கூனி அடித்து நடுகைக்குழியினை வெட்டுதல் வேண்டும்.

### நடுகைக்குழி தயாரித்தல்

நடுகை செய்யப்படவேண்டிய இடங்களை அடையாளப்படுத்திய பின்பு, கிரவல் மண்ணுள்ள இடத்தில் 3 அடி X 3 அடி X 3 அடி நீள அகல ஆழத்திலும், மணல் மண் இருவாட்டி மண் உள்ள தரையாயின் 2 அடி X 2 அடி X 2 அடி நீள அகல, ஆழத்திலும், நடுகைக் குழிகளை வெட்டுதல் வேண்டும். வெட்டும்போது, மேற்படை [illegible] கீழ்ப்படை மண்ணை எதிர்ப் [illegible] வும். குழியின் அடியில் நிலக் கறையானைக் கட்டுப்படுத்தக் கிடைக்கக் கூடிய அளவு அடுப்புச் சாம்பல் இடவும். பின்பு அடியில 2 படையில் பொச்சுமட்டை அடுக்கவும். அழுத்தமான பக்கம் கீழ்ப் பக்கம் இருக்கத்தக்கவாறு அடுக்கவும். மேற்படை மண்ணுடன் பின்வருவனவற்றைக் கலக்கவேண்டும். இரண்டு கூடை மாட்டெரு அல்லது ஒரு கூடை ஆட்டெரு உடன் 5kg அடுப்புச் சாம்பல் இவை கிடைக்காது விட்டால், அடியுரமாக ½ கிலோ தொடக்கம் 1 கிலோ அளவில் YPM (Young Palm Mixture - இளமரக்கலவை) மண்ணுடன் கலத்தல்வேண்டும். பசளை கலக்கப்பட்ட மண்ணை மணல் தரையாயின் 1½ அடி ஆழத்திற்கும், கிரவல் தரையாயின் 2½ அடி ஆழத்திற்கும் நிரப்புதல் வேண்டும். இத்தனை செயல் முறைக்கு முன்பு தென்னங்கன்று நாட்டக்கூடாது.

### நடுகைமுறையின் தொழிநுட்பம்

நாற்றுகளுடன் கூடிய விதைத் தேங்காய்களைக் கறையான் தாக்குவதனைத் தடுப்பதற்கு அல்றெக்ஸ் (Aldrex) 25% அல்லது குளோரோடேன் (Chorodane) பூச்சிநாசனியை 10ml ஐ10 l (லீற்) தண்ணீரில்கலந்த கலவையுள் அமிழ்த்திஎடுக்கவும். பின்பு நிலமட்டத்திலிருந்து ½ அடிக்குக் கீழே நடுகைக் குழியிலுள்ள மண் மட்டத்தில் ஒரு பொழி மண்ணை மண்வெட்டியால் கிடங்கின் நடுவே வெட்டி எடுத்து அதனுள் தென்னங்கன்றினை நேராகவும், விதைத் தேங்காயின் மேற்பரப்பும், கிடங்கிலுள்ள மண்மட்டமும் சமனாக இருக்கத் தக்கவாறும் தண்டுப் பகுதியை முற்றாக மண்ணினுள் தாழ்க்காமலும் மண்ணை அணைக்கவும். தேங்காயின் மேற்பரப்பும், கிடங்கிலுள்ள மண் மட்டமும் சமனாக இருக்கத்தக்கவாறும், தண்டுப் பகுதியை முற்றாக மண்ணினுள் தாழ்க்காமலும் மண்ணை அணைக்கவும்.

அனேகமான தென்னைச் செய்கையாளர்கள் தண்டுப் பகுதியையும், விதைத் தேங்காயையும் மண்ணினுள் முற்றாகத் தாட்டு விடுகின்றார்கள். இது முற்றிலும் பிழையான செயல்முறை ஆகும். எனவே மேற்குறிப்பிட்ட செயல்முறையில் மழை ஆரம்பித்திருக்கும் இவ்வேளையில் தென்னை நடுகையை மேற் கொள்ளலாம்.

**ஜெ. சத்தியேந்திரன்**

தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் யாழ். மாவட்டம்

★

## இன்று

தமிழ் சோதிடர் ஆய்வு ஒன்றியத்தின் வாராந்த பயிலரங்கும் ஆய்வரங்கும் இன்று ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு தமிழ் எழுத்தாளர் ஒன்றியப் பணிமனையில் நடைபெறவுள்ளன. பயிலரங்கை கே. சம்பசிவம் நடத்துவார். ஆய்வரங்கில் ஐயா சச்சிதானந்தமும், எஸ். பத்மநாதனும் ஆய்வுரை வழங்குவர் -(ஐ)

★ ★ ★

காரைநகர் வாரிவளவுநல்லி பக்கச்சபை நடத்தும் நவராத்திரி தின இசைப்போட்டிகள் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 8-30 மணி முதல் வட்டுக்கோட்டையில் யாழ்ரன் கல்லூரியில் நடைபெறும். ()க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலாலி முகாமில் இருந்து...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
றோட்டம் ஏற்பட்டது.

அவரை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்று போதிய சிகிச்சை அளிக்கவோ — அல்லது வேறு மருந்து வகைகளினால் நோயைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவோ — எங்களால் முடியாமல் போய்விட்டது.

இதனால் எனது மகள் மரணமடைந்தார்.

இதுபற்றி இராணுவத்தினரிடம் நாம் தெரிவித்தபோது அவர்கள் சடலத்தை வீட்டிலே புதைக்குமாறு கூறிவிட்டனர்.

நானும் மனைவியும் வீட்டின் பின்புற வளவில் மண்ணைத்தோண்டி மகளின் சடலத்தைப் புதைத்தோம். இச்சம்பவம் எம் மனதில் மிகுந்த வேதனையைக் கொடுத்தது.

தொடர்ந்து இராணுவத்தினர் அங்கு சோதனைகளை மேற்கொண்டு வந்தனர். 1993 நவம்பர் 15 ஆம் திகதி எமது வீட்டுக்கு மீண்டும் வந்த படையினர் ''நீதான் புலிகளின் தலைவன்'' எனக் கூறி என்னைக் கைதுசெய்து கொண்டு காரைநகர் கடற்படைத் தளத்துக்குச் சென்றனர்.

அங்கு கண்களைக் கட்டிய நிலையில் மூன்று நாட்கள் விசாரணை செய்தனர்.

பின்னர் பலாலிக்கு கடற்படைப் படகில் என்னை அழைத்துச் சென்றனர்.

அங்கு தனியான ஒரு அறையில் வைத்து மேலும் இரு நாட்கள் கண்கள் கட்டப்பட்ட நிலையில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டேன்.

விசாரணையின் பின்னர் ஒரு அறையில் தடுத்து வைக்கப்பட்டேன்.

அடிக்கடி இரும்புக்கம்பிகள் எஸ்லோன் குழாய்கள் என்பவற்றால் தாக்கப்பட்டதுடன் பல்வேறுவகையான சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டேன்.

என்னுடன் ஒரு அறையில் 24 பேர் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். நாங்கள் ஏதாவது கலகலப்பாகப் பேசுவதை இராணுவத்தினர் கண்டால் எமக்குத் தண்டனை வழங்குவார்கள்.

தவளைபோல இருக்குமாறு எம்மை மணிக்கணக்கில் விடுவார்கள்.

புதிய அரசாங்கம் பதவி ஏற்றபின்னர் ஒருநாள் அங்கு வந்த இராணுவ சார்ஜன்ட் ஒருவர் எம்மையெல்லாம் அழைத்து உடுப்புகளை களையுமாறு கூறினார். பின்னர் அவர்கள் எங்களைப் பார்த்து கேலிசெய்தனர்.

சுமார் 12 மாதங்கள் பலாலியில் தடுத்து வைக்கப்பட்டிருந்தேன்.

இவ்வாறு அவர் கூறினார்.


புங்குடுதீவு

## அம்பாள் விளையாட்டுக் கழகம்

நடத்தும் மாபெரும்

## உதைபந்தாட்டப் போட்டி

இடம்: யாழ். பல்கலைக்கழக மைதானம்.

காலம்: **16-10-94** ஞாயிறு காலை மாலை

காலை 8. 00 மணி

கால் இறுதியாட்டம்

யங்கெனறீஸ் எதிர் சென். மேரிஸ்

அரையிறுதி

சென். நீக்கிலஸ் எதிர் யங்றோயல்

யங்கென்றீஸ்/சென். மேரிஸ் எதிர் றோயல்

மாலை 2.30 மணி

மூன்றாம் இடத்திற்கான போட்டியும் இறுதியாட்டமும் நடைபெறும்.

பிரதம விருந்தினர்; திரு. இ. இளங்கோவன் (உதவிப் பிரதேச செயலர் - நல்லூர்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

நன்றி

அம்பாள் விளையாட்டுக் கழகம்

புங்குடுதீவு. (33372)



- மலரும் தீபாவளியை
- மங்களமாய் கொண்டாட
- மனநிறைவோடு அழைக்கின்றோம்
- கண்ணைக்கவரும் வகையில்
- புத்தம் புதிய புடைவை தினுசுகள்
- காஞ்சிபுரம், வர்னாசி, பெனாரிஸ், மீனா சற்றின்
- மைசூர் சில்க், கெஷ்மீர் சில்க், கைதராபாத் சில்க், ட்றோ சில்க்
- பூணம் சாறி, மைந்றோஷிபொன், எபர் போட், சூரத் சில்க், அப்பிள் சில்க்
- பிரியங்கா கொட்டன், பெங்களூர் கொட்டன், காஞ்சி கொட்டன்
- சுங்குடி கொட்டன்
- பட்டுவேட்டி, சேட்டிங், சூட்டிங் சிறுவர் சிறுமியருக்கான றெடிமேட் ஆடைகள் அனைத்தையும் உங்கள் தெரிவுக்கு இன்றே நாடுங்கள்

## ச. லிங்கநாதன்

## வண்ணச்சோலை

13 — 14 (பெரியகடை வீதி)
மேஜர் சோதியா தெரு
யாழ்ப்பாணம். (33370)


வைத்திய கலாநிதி
பொன்னம்பலத்திற்கு

## மகாஜன மைந்தர்களின்

# பிரார்த்தனை

வைத்திய உலகிற் கொடி கட்டிப் பறந்து தம் சொந்த மண்ணில் தனக்கென ஒரு தனி முத்திரை பதித்து அமரத்துவம் அடைந்த

**வைத்திய கலாநிதி எஸ். பொன்னம்பலம்**
அவர்களின்

**31ஆம் நினைவு நாள்**
இன்றாகும்

மகாஜன மாதாவின் புகழ் பூத்த மைந்தர்களில் முன்னணி வகிக்கும் தகைமையும், பெருமையும் இவருக்குண்டு. தனது கல்விக்காலத்தின் பெரும் பகுதியை இக் கல்லூரியிலேயே கற்றுச் சிறந்தவர். இக் கல்லூரி வரலாற்றில் இவருக்கு ஓர் சிறப்பிடமுண்டு. இவர் தன் ஆற்றல்களால், திறமைகளால் எவ்வளவோ சாதனைகள் படைக்கக் கூடியவராய் இருந்தும் தன் சொந்த மண்ணுக்கும், பிறந்த நாட்டுக்குமே தன் சேவை முழுவதையும் அர்ப்பணித்த பெரியோராக மிளிர்கின்றார். இவரால் எம் கல்லூரி பெருமை அடைகின்றது. இத்தகைய பல்வேறு சிறப்புக்களால் எம் உள்ளமெல்லாம் உறைந்துள்ள உத்தமனாகிய இத் தூயவனின் ஆத்ம சாந்திக்காக இன்றைய இப் புனித நன்நாளில், அவர்களின் குடும்பத்தினருடன் ஒன்றிணைந்து நாம் அனைவரும் பிரார்த்திக்கின்றோம்.

-பழைய மாணவர் சங்கம்.

மகாஜனக் கல்லூரி,
தெல்லிப்பழை. (7671)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 16—10—1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## புலமை பரிசை முடிவுகள்

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சை முடிவுகள் இன்னும் இரண்டு வாரங்களில் வெளியிடப்படும் என்று பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது. (ஐ)

### நாடு...

(1.ஆம் பக்கத் தொடர்ச்சி)
லானா தெரிவித்தார்.

தாம் முன் வைத்துள்ள 6 அம்சக் கோரிக்கைகளை ஏற்று அவற்றை நிறைவேற்ற உறுதியளிக்கும் கட்சியையே இ. தொ. கா ஜனாதிபதித் தேர்தலில் ஆதரிக்கும் எனத் திரு. தொண்டமான் ஏற்கனவே கூறியிருப்பது தெரிந்ததே. (இ-ஐ-6)

### விடுதலைப் புலிகள்...

(1.ஆம் பக்கத் தொடர்ச்சி)
பொதுமக்களையுமே ஆகும். உண்மையான சந்தேக நபர்களை விடுவிப்பதை இராணுவத்தினர் விரும்பாமல் இருக்கலாம்.— என்றார்.

இதே வேளை —

விடுதலைப் புலிகள் இயக்க சந்தேக நபர்கள் 18 பேரையே தாம் விடுதலை செய்திருப்பதாக வானொலி மற்றும் தொடர்பு சாதனங்கள் மூலம் அரசு பிரசாரம் செய்து வருகிறது. சர்வதேச செய்தி நிறுவனங்களும் அரசாங்கப் பிரச்சாரத்தை ஏற்று தாமும் அவ்வாறே நேற்றுச் செய்திகளை வெளியிட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஐ-6)

## அடுத்த சந்ததி.....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
யாமல் நிமிர்ந்து நிற்கின்றோம் என்பதைக் கண்காட்சி அவர்களுக்கு விளக்கியிருக்கும்.

நாலு நாட்களுக்கு முன் அநியாயம் செய்த ஹெலி நேற்று முன்தினம் வந்தது. எமது மக்கள் ஹெலி பூமழை பொழியப் போகின்றது என்று அதைத் தொட்டுத் தடவிப் பார்த்து ஆரவாம் செய்தார்கள் இது மன வேதனையைத் தருகிறது.

மக்கள் கேட்கலாம் நீங்கள் பேச்சுவார்த்தை நடத்தும்போது நாங்கள் ஏன் ஹெலியைப் பார்க்கக்கூடாது. என்று நாங்கள் மக்களின் பிரதிநிதிகளாக மிகக் கவனத்துடன் பேச்சுவார்த்தை நடத்துகின்றோம்.

சில சலுகைகளுக்காக எமது உரிமைகளை விட்டுகொடுக்க நாம் தயாராக இல்லை.

மின்சாரமும் போக்குவரத்துப் பாதையும் நல்ல வீதிகளும் ஏற்கனவே இருந்தவை தான்.

அவற்றைப் பறித்துவிட்டு மீண்டும் தரும்போது உரிமை கிடைத்து விட்டதாக நினைக்கக்கூடாது.

எமது மக்கள் நடந்து கொண்ட விதத்தால் என்ன நிகழ்ந்தது?

வானத்து அமரர்கள் போல் வரவேற்கப்பட்டார்கள் கொழும்புப் பிரதிநிதிகள் என்று கொழும்பில் பிரசாரம் செய்யப்படுகிறது.

நேற்றைய எமது வாழ்வின் பல அம்சங்களை நாம் இழந்துவிட்டோம்.

எமது மண்ணின் புவியியல் சூழலுக்கு ஏற்ற நாற்சார வீடு போய் அமெரிக்கப் பாணியிலான வீடுகளைக் கட்டி நாங்கள் நோயாளிகள் ஆகியுள்ளோம்.

அதுபோலவே எமது சமையல் பாத்திரங்களையும் மறந்துவிட்டோம். நச்சுக் கழகும் அலுமினியம் பாத்திரங்களைப் பாவிக்கின்றோம்.

இதைக் கூறும்போது முற்றுமுழுதாகப் பழைமையைப் பேணவேண்டும் என்று நான் கூறவில்லை.

பழையவற்றில் நல்லவற்றைப் பேணிப் புதுமையைப் புகுத்த வேண்டும் என்றே நான் — என்று தெரிவித்தார்.

விழாவில் முன்னதாக யாழ் இந்துக் கல்லூரியின் கீழைத்தேய பாண்ட் குழுவினரின் இசை சகிதம் சிறப்பு விருந்தினர்கள் யாழ். இந்துக் கல்லூரிச் சந்தியிலிருந்து கண்காட்சிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். (க)

### மட்டக்களப்பில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
வேல்(வயது 35), கண்ணப்பன் கணேஸ் (வயது 28), பொன்னுத்துரை கனகரத்தினம் (வயது 22), அருணகிரி தங்கராஜா (வயது 25), குமாரசாமி சண்முகம் (வயது 38), சின்னத்துரை கந்தசாமி (வயது 35), கிருஷ்ண பிள்ளை முத்துவேல் (வயது 35) ஆகிய 10 பேருமே கைதாகியுள்ளனர். (இ-4)

## நேற்று வீடுதலையான,...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
குடத்தனை)

- றேய்பண்ட் சாள்ஸ் கருணைசீலன் (வயது 27 — இரணைதீவு)
- சாமிநாதன் பயஸ் (வயது 19 — இரணைதீவு)
- தவசி சிவானந்தன் (வயது 24 — சங்கானை)
- திருச்செல்வம் செல்வேந்திரம் (வயது 19— நாகர் கோவில் மேற்கு)
- மயில்வாகனம் சவுந்தரராஜா (வயது 32 —கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்).
- வைத்திலிங்கம் சிவராசா (வயது 33 — யாழ்ப்பாணம்)
- வைரமுத்து சிவஞானம் (வயது 41 — மூளாய்)
- ஐயம்பிள்ளை சோதிநாதன் (வயது 41 — காரைநகர்)
- கனகசபை நடராசா
- சின்னத்தம்பி திருஞானசம்பந்தன்.

(ஐ- 173-4)


# பெற்றோருக்கும் மாணவருக்கும்!

நீங்கள் இப்போது என்ன செய்கிறீர்கள்?
ஜி.சி.ஈ சாதாரண பரீட்சையில் சித்தி எய்தியவரா?

அல்லது

ஜி. சீ. ஈ. சாதாரண தரத்தில் படிப்பவரா?
ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தி அடைந்து விட்டு தொழில் தேடுவோருக்கும் உயர்தரத்தில் பயில்வோருக்கும் இது பொருந்தும்.

எதிர் காலத்தில் நீங்கள் குறிப்பிட்ட தொழிலைத்தான் செய்ய வேண்டும் என்று விரும்புகிறீர்களா?

எதுவானாலும் சரி

இவற்றில் எந்த வகையைச் சேர்ந்தாலும் ஒரு குறையுமில்லை...

யாழ். மத்திய கல்லூரியில் 18 - 10 - 1994 செவ்வாய்க்கிழமை
காலை 9 - 00 மணி முதல்

நடைபெறும் தொழில் வழிகாட்டல் கருத்தரங்குக்கு வாருங்கள்.

உங்கள் கல்வித் தகைமையோடு ஈட்ட முடியாது என்று நீங்கள் கருதிக் கொண்டிருக்கும் வாழ்க்கைப் பேறுபேறுகளை வழி காட்டவே இந்தக் கருத்தரங்கு நடத்தப்படுகிறது.

நீங்களும், உங்கள் பெற்றோர் / பாதுகாவலரும் மேற்படி கருத்தரங்கில் கலந்து பயன் பெறுங்கள்.

**உங்கள் வளமான எதிர்காலத்துக்கு வழிகாட்டுவோம்.**

யாழ். றோட்டறிக் கழகம்நடத்தும்

## தொழில் வழிகாட்டல்

# கருத்தரங்கில்

| | | | |
|---|---|---|---|
| கணக்கியல் | - (Accountancy) | முகாமைத்துவம் | - (Management) |
| கட்டடக்கலை | - (Architecture) | ஆசிரியம் | - (Teaching) |
| பொறியியல் | - (Engineering) | தொழில் நுட்பம் | - (Technical) |
| சட்டம் | - (Law) | தாதி | - (Nursing) |

முதலான துறைகளில்

பேராசிரியர். பொ. பாலசுந்தரம்பிள்ளை,
திரு. இரா. சுந்தரலிங்கம் (முன்னாள் கல்விப் பணிப்பாளர்)
திரு.கே. ஜெயரட்ணம் (தொழில் நுட்பக் கல்லூரி அதிபர்)
திரு. Rtn. மா.திருவாதவூரன் (உதவி நிதியாளர் யாழ்.பல்கலைக்கழகம்)
திரு க. கனகரத்தினம் (தாதியர் பயிற்சிக் கல்லூரி)

ஆகியோர்

வழிகாட்டற் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்

அனைவரும் வருக

Rtn. PP. P. செல்வருநாதன், தொழிற் சேவை இயக்குநர், Vocational Service Director.

Rtn. PHF. E. சரவணபவன், தலைவர் 94/95, President.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பற்றறிகள் கசெட் நாடா பறிமுதல்

வடமராட்சி, ஒக். 16

நரோமா கப்பல் பயணிகள் கொண்டுவந்த ரோர்ச் பற்றறிகள் வீடியோகசெற் நாடாக்கள் என்பன திருமலையில் வைத்து கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்டன. (இ-173)

### நரோமா

வடமராட்சி, ஒக். 16

நரோமா கப்பலில் நேற்று 166 பயணிகள் வந்தனர். இக் கப்பல் 179 பயணிகளுடன் நேற்று நண்பகல் அளவில் திரும்பிச் சென்றது. (இ-173)

### புலிகளின் குரல் வானொலியில்

16 — 10 — 1994
ஞாயிறு இரவு

- 8-01 — இசையரங்கம் — பாடுபவர் — திருமதி மணி பத்மநாதன்
- 8-20 — தாயகப்பாடல்கள்
- 8-30 — செய்திகள்
- 8-40 — தொடர்நாடகம் — பொன்.கணேசமூர்த்தி எழுதும் இலங்கைமண் 43ஆம் அங்கம்

17— 10 — 1994
திங்கள் காலை

- 7-02 — மாவீரவணக்கம்
- 7-15— நீங்கள் கேட்டவை
- 7-30 — செய்திகள்
- 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

### 'ரஜெப்' இறுதித்தேர்வு

யாழ்ப்பாணம், ஒக். 16

ரஜெப் ஆங்கில நெறிக்கான இறுதித்தேர்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பலாலி ஆசிரிய கலாசாலையில் நடைபெறும்.

அத்துடன் மாலை 4.30 மணியளவில் ''எக்கோ'' என்ற சஞ்சிகையும் வெளியிடப்படவுள்ளது.

மாநில இணைப்பாளர் திரு. சோ. பத்மநாதன் இதனைத் தெரிவித்தார் (இ)

## மரண அறிவித்தல்கள்

### S. NAVARATNAM

முன்னைநாள் உரிமையாளர் லக்நிவச (Laknivasa Guest House, Nallur Cross Road, Jaffna) 6-10-94 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 08-10-94 கொழும்பில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
S. செல்வராஜா

37/22, 1 ஆம் ஒழுங்கை,
பிறவுண் ரோட்,
கந்தர்மடம். (சி-9513)

### திருமதி நாகலிங்கம் வள்ளியம்மை

(லிங்கம் ஸ்ரோர்ஸ், நெடுங்கேணி)

காரைநகர் புதுறோட்டைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ்ப்பாணம் 74/2, அரசடி வீதியை வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி நாகலிங்கம் வள்ளியம்மை 12-10-94 இல் சிவபதம் அடைந்துவிட்டார்.

இவர் காலஞ்சென்ற நாகலிங்கத்தின் (லிங்கம் ஸ்ரோர்ஸ் உரிமையாளர், நெடுங்கேணி) அன்பு மனைவியும், நர்மலிங்கம் (வர்த்தகர், நெடுங்கேணி), சுந்தரலிங்கம் (வர்த்தகர், நெடுங்கேணி), பாக்கியலட்சுமி, மகாலிங்கம் (வர்த்தகர், நெடுங்கேணி), ரதிதேவி, சசிராசிஷிதேவி (கனடா), பத்துமசோதி கொழும்பு), தனலட்சுமி (கொழும்பு), அமிர்தலிங்கம் (லண்டன்), கமலாம்பிகை (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், சுவர்ணம், விசயலட்சுமி, செல்வராசா (A.G.A. Office, நெடுங்கேணி), நிர்மலாதேவி, காலஞ்சென்ற சபாநாயகம் (ஆசிரியர்), பரமேஸ்வரன் (கனடா), நித்தியானந்தம் (H. N. B கொழும்பு), சிவராசா (நீர்ப்பாசன இலாகா), ஜீவா (லண்டன்), சிவபாலன் (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்பு மாமியும், காரைநகர் களபூமியைச் சேர்ந்த ஆறுமுகம் தங்கம்மாவின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மக்கள் மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(33371)

### சிமியோன்பிள்ளை செபமாலை

[சின்னத்தம்பி]

சில்லாலையைப் பிறப்பிடமாகவும், தற்பொழுது யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தவருமான சிமியோன்பிள்ளை செபமாலை 15 10-94 ல் காலமானார்.

இவர் ஞானமுத்துவின் அன்புக் கணவரும், பாக்கியம், இராசமணி, அருளம்மா, மரியதாஸ் [தங்கராசா, ராஜா ஸ்ரோர்ஸ் உரிமையாளர், பண்டத்தரிப்பு], இராசரத்தினம் [கனடா], ஆகியோரின் அருமைத் தந்தையும், திரவியம், இராசகுமார், பத்திநாதர் [செல்வராஜா], றஞ்சா, மலர் [கனடா] ஆகியோரின் மாமனாரும், ஜெறாட் - றஜனி, றஞ்சினி - யேசுதாஸன், [கனடா] சறோஜினி, சாந்தினி, மாலினி, றதி, விஜி, சுரேஷ், றெஜி, ஜஸ்மின், ராஜன், துசாடியஸ் [கனடா] ஆகியோரின் அன்புப் பேரனாரும், நிரோஜனின் பூட்டனாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இல 3, கதிற்றல்வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அந்தோனிப்பிள்ளை திரவியம் என்பவரின் இல்லத்தில் இருந்து [16 10-94] இன்று பிற்பகல் 2 மணியளவில் நல்லடக்கத்துக்காக பண்டத்தரிப்பு சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்:
மரியதாஸ்
[மகன்]

[சி/9338]